உ

சிவமயம்.

கற்பகவிநாயகனற்பதந்துணை.

சுவாமிமலை என்று வழங்குகின்ற

# திருவேரகயமகவந்தாதி.

இஃது

கவித்தலம் வித்துவான்

வேலையரவர்களியற்றியது.

---

இஃது

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

மாணாக்கருளொருவராகிய

சிதம்பரம்

பே. இராமலிங்கவுபாத்தியாயரவர்களால்

இயற்றப்பட்டவுரையுடன்

காரைக்காலைச்சேர்ந்த முப்பயிற்றங்குடி

சா. முருகையவாண்டையாரால்

சென்னபட்டணம்

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

பரிதாவிஞு கார்த்திகைமீ

விலை அணா - உ௰.

1912

## ஆக்கியோன்பெயர்.

கொந்தார் கடம்பணி யேரக மேவுங் குகற்குகந்த
வந்தாதி வீர சைவத்தை விளக்கிடு மாதித்தனு
நந்தாத ஞானச் சிவப்பிர காசன்ற னல்லருளால்
வந்தான் முருக னருள்பெற்ற வேலையன் வாழ்த்தினனே.

சிவமயம்.

கற்பகவிநாயகனற்பதந்துணை.

# திருவேரகயமகவந்தாதி

## மூலமும் உரையும்.

### காப்பு.

எண்டந்த முல்லை விழிவே லளக மிருளிடைசொற்
பண்டந்த மாமெனும் வள்ளிதெய் வானைதம் பங்கனுய
ரண்டந் தராதலம் போற்றே ரகன்றனந் தாதிசொல்லக்
கண்டந்த வேழ முகனைக லாவெனன் கருத்திடையே.

(இதன்பொருள்.) எண் தந்தம் முல்லை - மதிக்கத்தக்க பற்கள் முல்லையரும்புபோலவும்,—விழி வேல் - கண்கள் வேல் போலவும்,—அளகம் இருள் - கூந்தல் இருள்போலவும்,—இடை தந்து - இடை நூல்போலவும்,—சொல் பண் - சொல் பண்போலவும்,—ஆம் எனும் வள்ளி தெய்வானை தம் பங்கன் - ஆகுமென்று சொல்லுகின்ற வள்ளியம்மையையுந் தெய்வயானையம்மையையும் பாகத்திலுடையவரும்,—உயர் அண்டம் தராதலம் போற்று - உயர்வாகிய அண்டத்தவர்களும், பூலோகத்தவர்களுந் துதிக்கின்ற,—ஏரகன் அந்தாதி சொல்ல - திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்றவருமாகிய சுவாமிநாதக்கடவுளின்மேல் அந்தாதி யென்னும் பிரபந்தத்தை (அடியேன்) பாடு

தற்கு,—கண் தந்த வேழமுகன் - கண் கொடுத்த விநாயகரென்னுந் திருநாமத்தையுடைய விநாயகக்கடவுள்,—என் கருத்திடை அகலான் - அடியேன் மனதைவிட்டு நீங்கான் என்றவாறு.

இரண்டாம் அடியிலுள்ள அம் சாரியை. ஏ - ஈற்றசை. முல்லை என்றது அதன் அரும்புக்கானதும், அண்டம் தராதலம் என்பவை அவைகளிடத்துள்ளார்க்கானதும் ஆகுபெயர்கள்.

## நூல்.

பூவையம் பாக வமுதா ருலகும் புரந்தரனும்
பூவையம் பாகனும் போற்றே ரகந்துதி புன்னெஞ்சமே
பூவையம் பாக வெடுத்தானைச் செற்ற புராரியலைப்
பூவையம் பாகன்றன் சேயா றெழுத்தையும் போதிக்கவே.

(இ - ள்.) புல் நெஞ்சமே - புல்லிய மனமே!—பூவை அம்பாக எடுத்தானைச் செற்ற புராரி - புட்பங்களைப் பாணமாகக்கொண்ட மன்மதனைக்கொன்றருளிய திரிபுரத்துக்குப் பகைவரும்,—மலைப் பூவையம் பாகன் தன் சேய் - இமயமலையிற் பிறந்த உமாதேவியாரை அழகிய வாமபாகத்திலுடையவருமாகிய சிவபெருமானது புத்திரராகிய சுப்பிரமணியக்கடவுள்,—ஆறு எழுத்தையும் போதிக்க - தமது சடாக்ஷரத்தை யுபதேசிக்கும்பொருட்டு,—பூ ஐ - தாமரைப்பூவாகிய ஆசனத்திலிருக்கின்ற தலைவராகிய பிரமதேவரும்,—அம் பாகு அ அமுது ஆர் உலகும் - அழகிய குழம்பாகிய அந்த அமிர்தம் நிறைந்த தேவலோகத்திலுள்ள தேவர்களும்,—புரந்தரனும் - தேவேந்திரனும்,—பூ வையம் பாகனும் - அழகிய பூமிதேவியைப் பாகத்திலுடைய விஷ்ணுமூர்த்தியும்,—போற்று ஏரகம் துதி - துதிக்கின்ற திருவேரகமலையைத் தோத்திரஞ்செய். எ - று. (க)

உலகு என்றது, உலகத்தின்கணுள்ளவர்க்கானது ஆகுபெயர்.

திக்கு மதிக்கு மெழிலே ரகாவெங்கள் சேயிழைதித்
திக்கு மதிக்குங் கசந்தா டென்றற் புலிசிறவந்
திக்கு மதிக்குங் கடற்குங் குயிற்குந் தியங்கிப்பின்வந்
திக்கு மதிக்குறை தீரென்றுன் னாமங்கள் செப்புவளே.

(இ - ள்.) திக்கு மதிக்கும் எழில் ஏரகா - அஷ்டதிக்கின் கணுள்ளவர்களால் துதிக்கப்படுகின்ற அழகிய திருவேரகமலை யின்க ணெழுந்தருளியிருக்கின்ற கடவுளே!—எங்கள் சே இழை - எங்களுடைய சிவந்த ஆபரணங்களை யணிந்த பெண் ணனவள்,—தித்திக்கும் மது இக்கும் கசந்தாள் - தித்திக்கின்ற தேனையுங் கரும்பையும் வெறுத்தாள்,—தென்றல் புலி சீற - தென்றற்காற்றானது புலிபோலச் சீற,—வந்து உதிக்கும் மதிக் கும் கடற்கும் குயிற்கும் தியங்கி - வந்து உதயமாகின்ற சந்திர னுக்கும் கடலோசைக்கும் குயிலோசைக்கும் மயங்கி,—வந்திக் கும் - (தேவரீரை) வழிபாடுசெய்வாள்,—பின் மதிக்குறை தீர் என்று உன் நாமங்கள் செப்புவள் - அதன்பின் புத்தியின் குறை வை நீக்கியருளுக என்று தேவரீரது திருநாமங்களைச் சொல் லித் துதிப்பாள். எ - று. [இது நற்றாயிரங்கல்.] (உ)

கடல் குயில் என்பவை அவைகளின் ஓசைக்கானது ஆகுபெயர்.

புவனந் தினந்த நெடுமான் மருகன் புலவர்விரும்
புவனந் தினந்திக ழும்பொன்னி யேரகம் புக்கினர்வெற்
புவனந் தினந்திரி யாமன்மெய்ஞ் ஞானப் பொருளையியம்
புவனந் தினகரன் போற்புல் விருளறப் புந்திவந்தே.

(இ - ள்.) புவனம் தின் அந்த நெடுமால் மருகன் - உல கங்களையுண்டருளிய அந்த விஷ்ணுமூர்த்திக்கு மருகனும்,— புலவர் விரும்புவன் - தேவர்களால் விரும்பப்பட்டவனுமாகிய முருகக்கடவுளானவர்,—நந்து இனம் திகழும் பொன்னி ஏரகம் புக்கினர் - சங்குக்கூட்டங்கள் விளங்காநின்ற காவேரிநதியினுற்

சூழப்பட்ட தமது திருவேரகமலையை அடைந்தவர்களுக்கு,—வெற்பு வனம் தினம் திரியாமல் - மலைகளினிடத்துங் காடுகளினிடத்தும் (போய்) நாடோறுந்திரிந்து இளைக்காமல்,—புந்தி புல் இருள் அற - அவர்கள் மனதினிடத்துள்ள (அஞ்ஞானமாகிய) இருள் நீங்க,—அம் தினகரன் போல் வந்து - அழகிய சூரியனைப்போல் வந்து,—மெய்ஞ்ஞானப் பொருளை இயம்புவன் - மெய்ஞ்ஞானப்பொருளை உபதேசித்தருளுவர். எ - று.()

வந்தனை யானந்த வேரகற்கே செய்வேன் மற்றொருதெய்
வந்தனை யானஞ் சலிக்கே னெனைத்தொடர் வல்வினைப்ப
வந்தனை யானந்தன் வானோர் முனிவர்கள் வாழ்த்தவென்முன்
வந்தனை யானந் தகன்வீசு பாசத்தை மாற்றுவனே.

(இ - ள்.) அந்த ஏரகற்கே யான் வந்தனை செய்வேன் - அந்தத் திருவேரகத்திலெழுந்தருளியிருக்கும் சுவாமிநாதக்கடவுளையே யான் வணங்குவேன்,—மற்றொரு தெய்வந்தன்னை யான் அஞ்சலிக்கேன் - வேறொருகடவுளையும் அடியேன் வணங்கமாட்டேன்,—(ஆதலால்) அனையான் - அச்சுவாமிநாதக்கடவுளானவர்,—ஆல் நந்தன் வானோர் முனிவர்கள் வாழ்த்த - ஆலிலையில் நித்திரைசெய்கின்ற சங்கைத்தரித்த விஷ்ணுமூர்த்தியும் தேவர்களும் முனிவர்களும் துதிக்க,—என் முன் வந்து - அடியேனுக்கு முன்னே வந்து,—எனைத் தொடர் வல்வினைப் பவந்தனை - அடியேனைத்தொடருகின்ற வலிய வினையினாலுண்டாகிய பிறவியையும்,—அந்தகன் வீசு பாசத்தை-இயமனால் வீசப்பட்ட பாசத்தையும்,—மாற்றுவன் - நீக்கியருளுவர். எ - று.(ச)

வனந்தந்த மாதனங் கந்தரங் காட்டிய மறுமயற்க
வனந்தந் தவஞ்செயும் வேசிய ராசை வனசத்திலை
வனந்தந் தனமவர் கூடுத லேகரம் வாழ்த்து மின்செய்
வனந்தந்த வேலை வருதுயர் தீர வாங்கந்தனே.

(இ - ள்.) வனம் தந்த மாதனம் கந்தரங் காட்டி - அழகு பொருந்திய யானைத்தந்தத்தை யொத்த பெரிய தனங்களையும் கழுத்தையுங் காண்பித்து,—மருள் மயல் கவனம் தந்து - நீங்காத மயக்கத்தையுங் கவலையையும் கொடுத்து,—அவம் செயும் வேசியர் ஆசை - பாவத்தைத்தருகின்ற வேசியர்கண்மேல் வைத்த ஆசையினாலே,—அவர் கூடுதல் தம் தனம் - அவர்களைச் சேருதலே தங்களுக்குப் பெரிய செல்வமென்று (நினைத்து),—வனசத்து இலை வனம் வருதுயர் தீர - தாமரையிலையிற் பொருந்திய ஜலம்போலத் தளும்புகின்ற துன்பமானது நீங்க,—கந்தன் ஏரகம் வாழ்த்துமின் - கந்தசுவாமி யெழுந்தருளியிருக்கின்ற திருவேரகமலையைத் துதியுங்கள்,—அந்த அந்த வேலை வரம் செய்வன் - (அவர்)அந்தந்தச் சமயத்திலெழுந்தருளிவந்து வரத்தைக்கொடுத்தருளுவர். எ - று. (ரு)

கந்தரங் கஞ்சந் தனமிரு ளோதி கலைமதிமு
கந்தரங் கஞ்சரிக் குநீர்ச்சுழி யுந்தி காவிகமு
கந்தரங் கஞ்சனங் கன்னமி டைகளங் கண்மயிலூர்
கந்தரங் கஞ்ச வயலே ரகமன்ன காரிகைக்கே.

(இ - ள்.) மயில் ஊர் கந்தர் அம் கஞ்சவயல் ஏரகமன்ன - மயிலை வாகனமாகச்செலுத்துகின்ற கந்தசுவாமி யெழுந்தருளியிருக்கின்ற அழகிய தாமரைமலர்களையுடைய வயல்களாற் சூழப்பட்ட திருவேரகமலையிலிருக்கின்ற தலைவனே!—காரிகைக்கு - பெண்ணுக்கு,—இருள் ஓதி கந்தரம் - இருள்நிறம் பொருந்திய கூந்தல் மேகம்,—தனம் கஞ்சம் - முலை தாளம்,—முகம் கலைமதி - முகம் பூரணகலைகளையுடைய சந்திரன்,—உந்தி தரங்கம் சரிக்கும் நீர்ச்சுழி - கொப்பூழ் அலைகளின்மேற் பொருந்திய நீர்ச்சுழி,—கண் காவி - கண்கள் நீலோற்பலமலர்,—களம்

கமுகு - கழுத்து கமுகு,—இடை அந்தரம் - இடை ஆகாசம்,—சன்னம் கஞ்சனம் - கன்னம் கண்ணாடி. எ - று. [தலைவியின் அவயவம்புகழ்தல்.] (அ)

காரக லாத மதிலே ரகாமறை காணருமோங்
காரக லாதர னேபர னேநற் கடம்பின்முரு
காரக லாத மனைபோல வந்து கயமுகசங்
காரக லாத மதியேனை யாளக் கடனுனக்கே.

(இ - ள்.) கார் அகலாத மதில் ஏரகா - மேகங்கள் நீங்காத மதிலையுடைய திருவேரகமலையி லெழுந்தருளியிருப்பவனே!—மறை காண் அரும் ஓங்கார கலாதரனே - வேதங்களாலும் அறிதற்கரிய பிரணவமாகிய கலையைத் தரித்தவனே!—பரனே - மேலானவனே!—நல் கடம்பின் முருகு ஆர் அகலா - நல்ல கடப்பமாலையினது வாசனைபொருந்திய திருமார்பையுடையவனே!—கயமுக சங்கார - யானைமுகத்தையுடைய தாரகாசுரனைச் சங்கரித்தவனே!—உனக்கு - தேவரீருக்கு,—கலாத மதியேனை - கல்லாத புல்லறிவுடைய அடியேனை,—அனைபோல் வந்து ஆளக்கடன் - தாய்போல்வந்து அடிமைகொண்டருள்வது கடனாகும். எ - று. (எ)

தம். சாரியை. ஏ-அசை. கலாத அனை என்பன இடைக்குறை.

கடந்த வனத்தையெவ் வாறுசென் றாள்வஞ்சி கானெறிசங்
கடந்த வனத்தைக் கொடுக்குமை யோவென்ன காதலென்ன
கடந்த வனத்தைச் சுமந்த பலன்கொல் கருதுலகங்
கடந்த வனத்தைப் பயில்பொன்னி யேரகன் கார்வரைக்கே.

(இ - ள்.) கருது உலகம் கடந்தவன் - நினைக்கத்தக்க உலகங்களைக் கடந்தவனும்,—நத்தை பயில் பொன்னி ஏரகன் - சங்குகள் பொருந்திய காவேரிநதியினாற் சூழப்பட்ட திருவேர

கமலேயி லெழுந்தருளியிருப்பவனுமாகிய சுவாமிநாதக்கடவுளி னது,—கார் வரைக்கு - மேகங்கள் தவழுகின்ற மலையினிடத் துள்ள,—வஞ்சி - கொடிபோன்ற நம் பெண்ணானவள்,— அ வனத்தைக் கடந்து எவ்வாறு சென்றாள் - அப்பாலைவனத் தைக் கடந்து எவ்விதம் போனாள்,—கால் நெறி சங்கடம் - காலால் (நடந்து செல்லுதற்கு) வழி சங்கடமாயிருக்கும்;— ஐயோ தவனத்தைக் கொடுக்கும் - ஐயோ! வெப்பத்தைக்கொ டுக்கும்;—என்ன காதல் - இவளுக்கு என்ன ஆசை.—என் அகடு அந்த அனத்தைச் சுமந்த பலன் கொல் - என் வயிறு அந்த அன்னம்போன்ற பெண்ணைப் (பத்துமாதம்) சுமந்து பெற்ற பலனோ?—எ - று. [சுரம்சென்ற மகளைக்கண்டு நற்றாய் யிரங்கல்.] (அ)

வரையானை யன்பர்க்குத் துஞ்செழுத் தேரக மாம்பெரிய
வரையானைப் பாடி மகிழ்கின்றி லேன்முன் வனத்திற்குட
வரையானை மேய்த்தவற்கொப்பென்றுசொல்லியிவ்வையத்திற்செல்
வரையானை யோபுகழ்ந் தேனெனைப் போலிலையானிடரே.

(இ - ள்.) அன்பர்க்குத் துஞ்சு எழுத்து வரையானை - தம தடியார்களுக்கு இறப்பு என்னும் எழுத்தை எழுதாதவரும்,— ஏரகம் ஆம் பெரிய வரையானை - திருவேரகமாகிய பெரிய மலை யையுடையவருமாகிய சுவாமிநாதக்கடவுளை,—பாடி மகிழ் கின் றிலேன் - பாடிச் சந்தோஷிக்காதவனாகிய,—யான் - அடியேன்,— இவ் வையத்தில் செல்வரை - இப்பூமியிலுள்ள செல்வர்களை,— முன் வனத்தில் குட அரை ஆனை மேய்த்தவர்க்கு ஒப்பு என்று சொல்லிப் புகழ்ந்தேன் - முன்னாளில் காட்டினிடத்தில் குடம் போன்ற முலைமடியையுடைய பசுக்களை மேய்த்த விஷ்ணுமூர் த்திக்கு ஒப்பு என்று சொல்லிப் புகழ்ந்தேன்,—ஐயோ என்

னைப்போல் மானிடர் இல்லை - ஐயோ! என்னைப்போல் (கெட்ட) மனிதர்களில்லை. எ - று. (கூ)

அரை என்றது-அரையின்கணுள்ள மூலைமடிக்கானது ஆகுபெயர்.

மானத் தனத்தி கிரியா னயன்றொழும் வள்ளனங்கோ
மானத் தனத்தி முகற்கிளை யான்றனை வந்திப்பர்மேன்
மானத் தனத்தில குஞ்பொன்னி யேரகன் வன்மலைச
மானத் தனத்தி மயல்சொல் லியுமினம் வந்திலனே.

(இ - ள்.) மான் அத்தன் - மான் பொருந்திய திருக்கரத்தையுடைய உருத்திரனும்,—அத் திகிரியான் - அந்தச்சக்கிராயுதத்தையுடைய விஷ்ணுவும்,—அயன் - பிரமதேவனும்,—தொழும் வள்ளல் - வணங்குகின்ற வள்ளற்றன்மையுடையவனும்,—நம் கோமான் - நமது தலைவனும்,—அத்தன் - பிதாவும்,—அத்திமுகற்கு இளையான் - யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளுக்குத் தம்பியும்,—தனை வந்திப்பர் மேல் மானத்தன் - தன்னை வழிபடுகின்ற அடியார்களிடத்து அபிமானமுடையவனுமாகிய சுவாமிநாதக்கடவுளெழுந்தருளியிருக்கின்ற,—நத்து இலகும் பொன்னி ஏரகன் - சங்குகள் விளங்குகின்ற காவிரிநதியினாற் சூழப்பட்ட திருவேரகமலையிலுள்ள தலைவன்,—வல் மலை சமானத் தனத்தி மயல் சொல்லியும் இனம் வந்திலன் - சொக்கட்டாங் காய்க்கும் மலைக்குஞ் சமானமான முலைகளையுடைய பெண்ணினது மயக்கத்தைச் சொல்லியும் இன்னம் வந்தானில்லை. எ - று. [நற்றாயிரங்கல்.] (கo)

வந்தவி ராமனைச் செந்தீ யெனுநன் மதாரங்கடு
வந்தவி ராமனை மெய்யுடன் வாடுவள் வாய்விழிசி
வந்தவி ராமனை நேர்மன்னர் வேதியர் மாதவர்செல்
வந்தவி ராமனை சூழே ரகாவெங்கண் மாதரசே.

(இ - ள்.) வாய் விழி சிவந்த இராமனை நேர் மன்னர் - வாயுங் கண்களுஞ் சிவந்த இராமமூர்த்தியை யொத்த அரசர்களுடையவும்,—வேதியர் - பிராமணர்களுடையவும்,—மாதவர் - முனிவர்களுடையவும்,—செல்வம் தவிரா மனை சூழ் ஏரகா - செல்வம் நீங்காத வீடுகளாற் சூழப்பட்ட திருவேரகமலையிலுள்ள தலைவனே,—எங்கள் மாது அரசு - எங்கள் பெண்ணரசியானவள்,—வந்த இரா மனைச் செந்தீ எனும் - தோன்றிய இராவுக்கரசனாகிய சந்திரனைச் சிவந்த நெருப்பென்று சொல்லுவாள்,—நல் மதுரம் கடுவம் (எனும்) - நல்ல இனிப்பான வஸ்துக்களைக் கசக்கிறதென்று சொல்லுவாள்,—தவிராமல் நைமெய்யுடன் வாடுவாள் - நீங்காது வருந்துகின்ற சரீரத்தோடு வாடுவாளாயினாள். எ - று. [நற்றாயிரங்கல்.] (கக)

எனும் என்பதைக் கடுவம் என்பதோடுங் கூட்டப்பட்டது மன்னை என்பது மனை என வந்தது இடைக்குறை.

மாத ரவந்திகை வாரா திசைக்குயில் வன்குரல்கம்
மாத ரவந்தி மதியையுண் ணாது மனத்துயர்சும்
மாத ரவந்திம் மலயத்து வாடையும் வாட்டநைவாண்
மாத ரவந்திக ழும்பொன்னி யேரகன் மாலைகொண்டே.

(இ - ள்) மாது - நம் பெண்ணானவள்,—அரவம் திகழும் பொன்னி ஏரகன் மாலை கொண்டு - ஒலிவிளங்காநின்ற காவேரிநதியினாற் சூழப்பட்ட திருவேரகமலையின்கணுள்ள தலைவன் மேல் மயக்கத்தைக் கொண்டு,—மாதர் அவந்திகை வாராது - அழகிய கிளி வாராமையாலும்,—இசைக்குயில் வன்குரல் கம்மாது - ஒலித்தலையுடைய குயிலினது வலிய ஓசை குறையாமையாலும்,—அரவு அந்தி மதியை உண்ணாது - பாம்பு அந்திக் காலத்தில் தோன்றுகின்ற சந்திரனை யுண்ணாமையாலும்,—

சும்மா மனத்துயர் தர - வீணாக மனத்துயரத்தைத்தர,—இம் மலயத்து வாடையும் வாட்ட - இந்த பொதியமலையிலிருந்து வீசுகின்ற தென்றற்காற்றும் வந்து வாட்ட,—நைவாள் - வருந்துவாள். எ - று. [தோழியிரங்கல்.] (கஉ)

மாலை யனந்த யுகம்போல வெண்ணி மயங்குமிவண்
மாலை யனந்தனை நேர்நடை யீர்சொலும் வந்துபது
மாலை யனந்த வயிரா வதன்றொழும் வண்கடப்ப
மாலை யனந்த மிகுமே ரகத்துறை வானவற்கே.

(இ - ள்.) அனம் தனை நேர் நடையீர் - அன்னத்தையொத்த நடையையுடைய பெண்களே!—பதும ஆலயன் - தாமரை மலரைக் கோயிலாகக்கொண்டு வீற்றிருக்கின்ற பிரமதேவனும்,—அந்த அயிராவதன் வந்து தொழும் - அந்த அயிராவதம் என்னும் வெள்ளையானையையுடைய தேவேந்திரனும் வந்து வணங்குகின்ற,—வண் கடப்ப மாலையன் - வளப்பம் பொருந்திய கடப்பம்பூமாலையை யணிந்த முருகக்கடவுளெழுந்தருளியிருக்கின்ற,—அந்தம் மிகும் ஏரகத்து உறை வானவற்கு - அழகுமிகுந்த திருவேரகமலையில் வசிக்கின்ற தேவர்களையொத்த தலைவனுக்கு,—மாலை அனந்த யுகம் போல எண்ணி மயங்கும் - மாலைக்காலத்தை முடிவில்லாத யுககாலம் போல நினைத்துக் கலங்குகின்ற,—இவள் மாலை சொலும் - இப்பெண்ணினுடைய மயக்கத்தைச் சொல்லுங்கள். எ - று. [நற்றாய் தோழிகளைத் தலைவனிடத்துத் தூதுவிடுத்தல்.] (கங)

வாரணக மாலையன் றாணைக யாவையு மாகவுயர்
வாரணக மாலைய மாய்கொள்வன் வெண்கரி வாங்கியுண்ண
வாரணக மாலை முறித்தேந்து மேரக வள்ளறரு
வாரணக மாலை விடுத்தா ருடன்வைகும் வாழ்வினையே.

(இ - ள்.) வான் ஆக - ஆகாசமாகவும்,—மால் அயன் தாளுக - விஷ்ணுவும் பிரமனுந் தாளுகவும்,—யாவையும் ஆக - (உலகங்களிலுள்ள) சரம் அசரம் என்னும் பொருள்களெல்லாம் தாளுகவும்,—உயர் வான் - விசுவரூபங்கொண் டெழுந்தருளி யிருக்கின்றவனும்,—நாகம் ஆலயம் ஆய் கொள்வன் வெண்கரி வாங்கி உண்ண - சுவர்க்கலோகத்தை ஆலயமாகக் கொண்டி ருக்கின்ற இந்திரனுடைய வெள்ளையானை வாங்கித்தின்னும் படி,—வான் நாகம் ஆலே முறித்து ஏந்தும் ஏரக வள்ளல் - பெரி யபுன்னைமரங்களையும் ஆலமரங்களையுமுறித்து ஏந்திக்கொண்டி ருக்கின்ற திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற வள்ளற் றன்மையை யுடையவனுமாகிய சுவாமிநாதக்கடவுள்,—மாலே விடுத்தார் உடன் வைகும் வாழ்வினை - (பிரபஞ்ச) மயக் கத்தை விட்ட அடியார்களோடு கூடி வாழும் வாழ்வை,—தரு வான் ஆக - கொடுப்பாளுக.—எ - று. (கச)

விணையக் கரச்சுட ராழிவிட் டோன் கொன்றை மெல்லிதழ்ப்பூ
விணையக் கரவை யணிந்தோனும் வேதனும் வேண்டவெம்போர்
விணையக் கரவசு ரர்ச்செற்ற வேரக வேலவென்று
விணையக் கரமிரு மூன்றும் பதித்தருள் வித்தகனே.

(இ - ள்.) விணையக் கரச் சுடர் ஆழிவிட்டோன் - வஞ்ச கத்தையுடைய கராசுரன்மேல் ஒளிபொருந்திய சக்கிராயுதத் தைச் செலுத்திய விஷ்ணுமூர்த்தியும்,—மெல் இதழ் கொன் றைப் பூவினை அக்கு அரவை அணிந்தோனும் - மெல்லிய இத ழ்களையுடைய கொன்றைப்பூமாலையையும் எலும்பு மாலையையும் சர்ப்பத்தையும் அணிந்த உருத்திரமூர்த்தியும்,—வேதனும் வே ண்ட - பிரமதேவனும் பிரார்த்திக்க,—வெம்போர் வில் கரவு அசுரர் நைய செற்ற ஏரக வேல - கொடிய யுத்தத்தில் வில்லி னுல் வஞ்சகத்தையுடைய அசுரர்கள் வருந்தும்படி கொன்றரு

ளிய திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற வேலாயுததர னே,—வித்தகனே - ஞானசொரூபியே,—என் நாவின் ஐ அக் கரம் இரு மூன்றும் பதித்தருள் - அடியேனது நாவில் அழகிய சடாக்ஷரத்தை எழுதியருளும். எ - று. (ககூ)

யித்தக ரஞ்சலித் தார்வினை தீர்க்கும் விடையர்முன்வேள்
வித்தக ரஞ்ச நடத்தும் பிரானை வெகுளியைய
வித்தக ரஞ்சந் திலகே ரகத்தினில் வேண்டுமின்கு
வித்தக ரஞ்சலி யாதொழி வீர்சன்ம வேலையையே.

(இ - ள்.) அகரம் சந்து இலகு எரகத்தினில் - பிராமணர் களுடைய தெருக்களும் சந்துகளும் விளங்காநின்ற திருவேரக மலையினிடத்திற்போய்,—வித்தகர் - ஞானசொரூபரும்,—அஞ் சலித்தார் வினை தீர்க்கும் விடையர் - தம்மைக் கைகுவித்து வணங்குகின்ற அடியவர்களது பாவங்களை யொழிக்கும் வல்ல மையுடையவரும்,—முன் வேள்வித் தகர் அஞ்ச நடத்தும் பிரானை - முன்னே (நாரதமுனிவரது) யாகத்திற் றோன்றிய ஆட்டுக்கடா அஞ்சும்படி வாகனமாகச் செலுத்துகின்றவருமா கிய முருகக்கடவுளை,—வெகுளியை அவித்து - கோபத்தை யொழித்து,—குவித்தகரம் சலியாது வேண்டுமின் - அஞ்சலி யாகக் குவித்த கைகளை எடாமல் நின்று பிரார்த்தியுங்கள்;— சன்ம வேலை ஒழிவீர் - பிறவிக்கடலைக் கடப்பீர்கள். எ - று. ()

வேலை யிலங்கை யழித்தான் மருக வினைகளெய்தும்
வேலை யிலங்கை மனம்பிரி யாமல் விரும்பிநிதம்
வேலை யிலங்கைத் துனக்கேசெய் தேரக மேவிநிற்க
வேலை யிலங்கை நெடுங்கைவைத் தோயருண் மெய்ப்பத்தியே

(இ - ள்.) வேலை இலங்கை அழித்தான் மருக - சமுத்தி ரத்தினூற் சூழப்பட்ட இலங்காபுரியை அழித்த விஷ்ணுமூர்த் தியினுடைய மருகனே!—அயில் வேல் ஐ நெடும் கை வைத்

தோய் - கூர்மைபொருந்திய வேலாயுதத்தை அழகிய நீண்ட திருக்கரத்தில் ஏந்திய குமாரக்கடவுளே!—வினைகள் எய்தும் வேலையில் - (அடியேனை இரு) வினைகள் பந்திக்குங் காலத்தில்,—இலங்கு மனம் பிரியாமல் விரும்பி - விளங்குகின்ற மனமானது தேவரீரை விட்டு நீங்காமல் விருப்பமுற்று,—இலம் கைத்து - இல்வாழ்க்கையை வெறுத்து,—ஏரகம் மேவி - திருவேரகமலையை யடைந்து,—உனக்கே நிதம் வேலை செய்து நிற்க மெய்ப் பத்தி அருள் - தேவரீருக்கே நாடோறுந் திருத்தொண்டுசெய்து நிற்கும்படி உண்மையானபத்தியைக் கொடுத்தருளும். எ - று. (கஎ)

ஐ அங்கு சாரியை. இல்லம் என்பது இலம் என வந்தது இடைக்குறை.

பத்திர மாகமத் தின்படியே ரகன்பா தத்தர்ச்சிப்
பத்திர மாக விருப்பீரெஞ் ஞான்றும் பலவினையு
பத்திர மாக மடையாது கேண்மினிப் பாரிற்சிற்றின்
பத்திர மாகத் தமரர்க் கரிய பதம்வருமே.

(இ - ள்.) இப் பாரில் சிற்றின்பத்திர - இப்பூமியிலுள்ள சிற்றின்பங்களை நிலையாகக்கொண்ட மனிதர்களே!—கேண்மின் - (யான் சொல்லுவதைக்) கேளுங்கள்,—பத்திரம் - பத்திரங்களைக் கொண்டு,—ஆகமத்தின்படி ஏரகன் பாதம் அர்ச்சிப்ப - சிவாகமவிதிப்படி திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற சுவாமிநாதக்கடவுளின் திருவடிகளைப் பூசை செய்வதை,—திரமாக இருப்பீர்—உறுதியாகக் கொண்டிருப்பீர்களாயின்,—எஞ்ஞான்றும் பல வினை உபத்திரம் அகம் அடையாது- எந்நாளும் பலவகைப்பட்ட வினைகளினாலுண்டாகும் வருத்தத்தைச் சரீரமடையாது;—மாகத்து அமரர்க்கு அரியபதம் வரும்- விண்ணுலகத்தில் வாழ்கின்ற தேவர்களுக்குங் கிடைத்தற்கரிய பதவி கிடைக்கும். எ - று. (கஅ)

பதஞ்சலி யாரிவ ரென்னக் கலைகள் பலபடித்துப்
பதஞ்சலி யாதற் பகலாய் நடந்துமுன் பாடினுநற்
பதஞ்சலி யாதரைக் காசுங் கொடார்தமைப் பற்கெஞ்சியேற்
பதஞ்சலி யாதலி னேரக னலர்ப் பாதத்தையே.

(இ - ள்.) இவர் பதஞ்சலியார் - இவர் ஆதிசேஷன் என்று,—பதம் சலியாது அல் பகலாய் நடந்து - கால்கள் சலிக்காமல் இராப்பகலாய் நடந்து,—பல கலைகள் படித்து - பலசாஸ்திரங்களை அவருக்குப் படித்துக் காட்டி,—நல் பதம் சலியாது முன் பாடினும் - நல்லசொற்கள் குறையாமல் அவர்முன் பாட்டுக்களைப் பாடினும்,—அரைக்காசும் கொடார் தமை - அரைக்காசுங் கொடாத உலோபிகளிடத்து,—பல் கெஞ்சி ஏற்பது என்ன - பல்லைக்காட்டிக்கெஞ்சி இரப்பதினால் என்னபிரயோசனம்,—ஆதலினால் ஏரகன் மலர்ப்பாதத்தை அஞ்சலி - ஆதலினால் (மனமே) திருவேரகமலையின்கணெழுந்தருளியிருக்கும் சுவாமிநாதக்கடவுளினது செந்தாமரை மலர்போன்ற திருவடிகளைக் கைகுவித்து வணங்கு. எ - று. (கக)

இச்செய்யுளுக்கு வேறொருவிதம் பொருள்கூறுவாரும் உளர் அதுவருமாறு:—

ஏரகன் மலர்ப்பதத்தை அஞ்சலியாதலினால் - திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற சுவாமிநாதக்கடவுளினது செந்தாமரைமலர்போன்ற திருவடிகளைக் கைகுவித்து வணங்காமையினாலே,—இவர் பதஞ்சலியார் என்ன - இவர் ஆதிசேஷன் என்று சொல்லி,—கலைகள் பல படித்து - பலசாஸ்திரங்களையும் படித்துச் சொல்லி,—பதம் சலியாது அல் பகலாய் நடந்து முன் பாடினும் - கால்கள் சலிக்காமல் இராப்பகலாய் நடந்து முன்னேநின்று பாடினாலும்,—நல் பது அஞ்சு அல் யாது அரைக்காசும் கொடார் தமை - நல்ல பத்து அஞ்சு

அல்லது யாதொரு அரைக்காசுங் கொடாத உலோபிகளை,— பல் கெஞ்சி ஏற்பது - பல்லைக்காட்டிக் கெஞ்சி இரப்பது (ஆகும்.) எ - று.

பாத கமல மகற்றே ரகாபன் னிருகைக்கடம்
பாத கமலந் திகழ்சோதி யீறில் பயன்றருநின்
பாத கமலந் தராவிடின் முத்திப் பதத்தைவிரும்
பாத கமலங் கலோதியர் மாலிற் படிந்திடுமே.

(இ - ள்.) பாதகம் மலம் அகற்று ஏரகா - பாதகத்தையும் மலங்களையு நீக்குகின்ற திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்றவரே!—பன்னிருகைக் கடம்பா - பன்னிரண்டு திருக்கரங்களையுங் கடப்பம்பூமாலையு முடையவரே!—அமலம் திகழ் தரு சோதி - மலமுத்தராய் விளங்கத்தக்க சோதிசொரூபரே!—ஈறில் பயன் தரும் நின் பாத கமலம் தராவிடின் - அழிவில்லாத பிரயோசனத்தைக் கொடுக்கின்ற தேவரீரது திருவடித்தாமரை மலர்களைத் தந்தருளாவிடின்,—அகம் முத்திப் பதத்தை விரும்பாது - (அடியேன்) மனம் மோக்ஷபதவியை விரும்பாமல்,—அலங்கல் ஓதியர் மாலில் படிந்திடும் - மலர்மாலையைத் தரித்த கூந்தலையுடைய பெண்களுடைய மயக்கத்தில் அழுந்திவிடும்.()

படிகடந் தான்றிரு வேரக ஞமம்பல காலுநெஞ்சே
படிகடந் தானிலை யென்றுன்ன ஞன்கு பதங்களெனும்
படிகடந் தானந்த முத்தியைச் சேர்வைமெய்ப் பத்திதனிற்
படிகடந் தான மெனவிருந் தாலென் பயன்றருமே.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!—கடந்தான் திருவேரகன் நாமம் பல காலும் படி - (உலகங்களையெல்லாங்) கடந்தவனும் திருவேரகமலையில் எழுந்தருளி யிருக்கின்றவனுமாகிய சுவாமிநாதக்கடவுளின் திருநாமங்களைப் பலமுறையும் உச்சரி,—படி

கள் தந்தான் இலை என்று உன்னல் - மேலான பதவிகளைக் கொடுத்தானில்லை என்று நினையாதே;—நான்கு பதங்களென் னும் படி கடந்து - (சாலோக சாமீப சாரூப சாயுச்சியம்) என் னும் நான்கு பதங்களையும் கடந்து,—ஆனந்த முத்தியைச் சேர் வை - மகிழ்ச்சியைத்தரத்தக்க மோக்ஷத்தை அடைவாய். (ஆத லின்),—மெய்ப்பத்தி தனிற் படி - உண்மையாகிய பத்தியில ழுந்து;—கடம் தானம் என இருந்தால் என்பயன் தரும்-காடே இடம் என்று நினைத்துத் தவம் செய்துகொண்டிருந்தால்(அது) என்ன பிரயோசனத்தைத்தரும்? எ - று. (உக)

தருமா விதனச் சுரந்தாண் டினமினித் தண்ணிழற்பந்
தருமா விதந்தரு காவியும் வாவியுஞ் சாலைமல்க
தருமா விதனயர் வந்தீரு மேரகன் சாரன்மலர்த்
தருமா விதனரு கேபாடு மின்னிசைத் தானமின்னே.

(இ - ள்.) ஏரகன் சாரல் மலர்த் தரு மா - திருவேரகமலை யிலெழுந்தருளியிருக்கின்ற சுவாமிநாதக்கடவுளினது மலைச்சா ரலின்கணுள்ள மலர்களையுடைய விருக்ஷங்களிலிருக்கின்ற வண் டுகளானவை,—இதன் அருகே பாடும் இன் இசைத் தான மின்னே - இதன்பக்கத்திலே பாடுகின்ற இனிய இசையையு டைய இடத்தில் வசிக்கின்ற மின்னலையொத்த பெண்ணே!— மா விதனம் தரும் சுரம் தாண்டினம் - பெரிய விசனத்தைத் தரத்தக்க பாலைநிலத்தைக் கடந்தேம்,—இனித் தண் நிழல் பந் தரும் மாவிதம் தரும் காவியும் வாவியும் சாலை மல்கத் தரும் - இனிமேல் குளிர்ச்சிபொருந்திய நிழலைத் தருகின்ற நீர்ப்பந்தர் களையும் பெரிய பலவிதமாகிய சோலைகளையும் தடாகங்களையும் மார்க்கத்தில் நிறையத்தரும்,—ஆவி தன் அயர்வும் தீரும் - உயிர்ச்சோர்வு நீங்கும். எ - று. [தலைவன் தலைவிக்குச் சுரத் தியல்பு கூறல்.] (உஉ)

தான வனங்க மலையுங் கடலுந் தகர்சண்முகத்
தான வனங்கடப் பந்தார் கொணர்கில சந்துசொன்னி
தான வனங்கணல் லேரகஞ் சென்று தழலிற்கடி
தான வனங்க சரத்தோ டிளைக்குமித் தார்குழற்கே.

(இ - ள்.) தழலில் கடிது ஆன அனங்க சரத்தோடு இளைக்கும் இத்தார்குழற்கு - அக்கினியைப் பார்க்கினுங் கொடிதாகிய மன்மதபாணத்தினால் சரீரம் இளைக்கப்பெற்ற மாலையைத் தரித்த கூந்தலையுடைய பெண்ணுக்கு,—சந்து சொல் நிதான அனங்கள் - தூதுசொல்லுகின்ற நிதானத்தையுடைய அன்னங்களானவை,—நல் ஏரகம் சென்று - நன்மைபொருந்திய திருவேரகமலையினிடத்துப் போய்,—தானவன் அங்க மலையும் கடலும் தகர் சண்முகத்தான் அவன் அம் கடப்பம் தார் கொணர்கில - சூரபத்மனுடைய சரீரமாகிய மலையையும் அவன் மாமரவடிவாய் நின்ற கடலையும் சிதைத்தருளிய ஆறுதிருமுகங்களையுடையவனாகிய அச்சுவாமிநாதக்கடவுளின் அழகிய கடப்பமாலையைக் கொண்டுவரவில்லை. எ - று. [தோழி அன்னத்தோடு புலந்துரைத்தது.] (உரு)

அன்னம் என்றது—அனம் எனவந்தது இடைக்குறை.

தாரக லாதனி மாயூர வீரச் சதுமறைவித்
தாரக லாதவ ருள்ளம் புகாத தலைவதவத்
தாரக லாத திருவே ரகக்குறத் தையலெனுந்
தாரக லாதவன் சேய்வீசு பாசத் தளையறவே.

(இ - ள்.) கல் ஆதவன் சேய் வீசு பாசத் தளை அற - மலைபோன்ற சூரியனுடைய குமாரனாகிய இயமனால் வீசப்பட்ட பாசக்கட்டானது நீங்க,—தார் அகலா - மலர்மாலையைத்தரித்த மார்பையுடையவனே!—தனி மாயூர - ஒப்பற்ற மயிலை வாகனமாகவுடையவனே!—வீர - பராக்கிரமத்தை யுடையவனே!—

சது மறை வித்தார - நான்குவேதங்களின் விரிபொருளாயுள்ளவனே!—கலாதவர் உள்ளம் புகாத தலைவ - கல்வியறிவில்லாத மூடர்களது மனதினிடத்துச் செல்லாத தலைவனே!—தவத்தார் அகலாத் திருவேரக - தவத்தையுடைய முனிவர்கள் நீங்காத திருவேரகமலையிலெழுந்தருளி யிருக்கின்றவனே!—குறத்தையல் தார - குறப்பெண்ணாகிய வள்ளிநாயகியை மனைவியாகவுடையவனே!—எனும் - என்று துதியுங்கள். எ - று. (உச)

கல்லாத, என்னும், என்பன—கலாத, எனும், என வந்தன இடைக்குறை.

வேக மடங்க வலைப்புன் பிறப்பில் விடுக்குமவி
வேக மடங்கப் பகர்மின் கமலம் விளக்கெடுப்ப
வேக மடங்கண் வளர்வய லேரக வேலன்வய
வேக மடங்க லுருவான் மருகன்றன் மேற்கவியே.

(இ - ள்.) கமலம் விளக்கு எடுப்ப கமடம் கண் வளர் வயல் ஏரக வேலன் - தாமரைமலர்கள் தீபம்போல் பிரகாசிக்க ஆமைகள் நித்திரைசெய்கின்ற வயல்களாற் சூழப்பட்ட திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற வேலாயுத தரனும்,—வய ஏக மடங்கல் உருவான் மருகன் தன் மேல் - வெற்றிபொருந்திய ஒன்றாகிய நரசிங்கவடிவங்கொண்ட விஷ்ணுமூர்த்தியினுடைய மருகனுமாகிய சுவாமிநாதக்கடவுளின் மேல்,—கவி - கவிகளை,—வேகம் மடங்க அலை புல் பிறப்பில் விடுக்கும் அவிவேகம் அடங்கப் பகர்மின் - நாற்கதிகளிலும் மடங்கி மடங்கி வரும்படி அலைக்கின்ற புல்லிய பிறப்புக்களிற் செலுத்துகின்ற அஞ்ஞானம் நீங்கப் பாடுங்கள். எ - று. ஏ - தேற்றம். (உரு)

கவிக்குஞ் சரம்பற் றுமுன்பற் றமின்கை கருதலருங்
கவிக்குஞ் சரங்கொண் டெயிரளித் தான்கன கச்சுடிகை
கவிக்குஞ் சரப நிகரோர்மன் செந்நெற் கதிரொடுசெங்
கவிக்குஞ் சரமணி காட்டும்பொன் னேரகன் காவகத்தே.

(இ - ள்.) செந்நெல் கதிர் ஓடு சங்கு சரம் அவிக்கும் மணி காட்டும் பொன் ஏரகன் காவகத்தே - செந்நெற்கதிர்களையும் சங்குகளையும் துன்பஞ்செய்தழித்து உண்டாகாநின்ற முத்துக்கள் பிரகாசிக்கின்ற அழகிய திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கும் சுவாமிநாதக்கடவுளினது சோலையினிடத்துள்ள,—கனகச் சுடிகை கவிக்கும் சரபம் நிகர் ஓர் மன் - பொன்னினாற் செய்யப்பட்ட முடியைத்தாங்கிய சரபேசனையொத்த ஒரு தலைவன்,—கவிக் குஞ்சரம் பற்று முன்பு - கவிழ்ந்து நடக்கின்ற யானையானது என்னைப் பிடித்தற்கு முன்னே,—அற்றம் கருதலர் ஊங்கு அவிக்கும் மின் சரம் கைக் கொண்டு - அஞ்சுதலையுடைய பகைவர்களது உயர்வை அழிக்கத்தக்க ஒளிபொருந்திய பாணத்தைக் கையிற்கொண்டு,—உயிர் அளித்தான் - என் உயிரைக் காப்பாற்றினான். எ - று. [களிறு தரு புணர்ச்சியால் மறத்தொடு நிற்றல்.] (உகூ)

காவ லரிக்கு வலயத்திற் காகுவர் காயந்தகன்
காவ லரிக்கும் வலத்தர் நலத்தர் கவினென்றுநீங்
காவ லரிக்கு மதிகாந் தியார்விண் கடந்தெழுந்த
காவ லரிக்கு வனஞ்சூழ் மேரகங் கண்டவரே.

(இ - ள்.) விண் கடந்து எழுந்த அலர் கா இக்கு வனம் சூழும் ஏரகம் கண்டவர் - ஆகாயத்தைக் கடந்து மேலெழுந்த பூஞ்சோலைகளாலும் கருப்பஞ் சோலைகளாலுஞ் சூழப்பட்ட திருவேரகமலையைத் தரிசித்தவர்கள்,—இக் குவலயத்திற்குக் காவலர் ஆகுவர் - இப்பூமிக்கு அரசராவார்கள்;—காய் அந்தகன் காவல் அரிக்கும் வலத்தர் - கொல்லுகின்ற இயமனுடைய காவலைக் கெடுக்கும்படியான வல்லமையுடையராவார்கள்;—நலத்தர் - எல்லாநன்மைகளையு முடையராவார்கள்;—கவின்

என்றும் நீங்கா அலரிக்கும் அதி காந்தியார் - அழகினால் எப்பொழுது நீங்காத சூரியனைப்பார்க்கினும் மிகுந்த ஒளியையுடையராவார்கள். எ - று. (உஎ)

கண்டஞ் சங்கந் தரளந் தந்தமோதி கவினடைசொற்
கண்டஞ் சங்கந் தரமாமட வார்மயல் கைத்துப்புவிக்
கண்டஞ் சங்கந் தநிற்கென்றே ரகந்தொழு கன்னெஞ்சமே
கண்டஞ் சங்கந் தரமாக்கும் பிறப்பெனுங் காய்வினையே.

(இ - ள்.) கல் நெஞ்சமே - கல்லையொத்த மனமே!—கண்டம் சங்கு - கழுத்து சங்குபோலவும்,—தந்தம் தரளம் - பற்கள் முத்துப்போலவும்,—ஓதி கந்தரம் - கூந்தல் மேகம்போலவும்,—கவின் நடை அம்சம் - அழகிய நடை அன்னம்போலவும்,—சொல் கண்டு - சொற்கள் கற்கண்டு போலவும்,—ஆம் மடவார் மயல் கைத்து - ஆகின்ற பெண்கள்மேல் வைத்த மயக்கத்தை வெறுத்து,—கந்த - கந்தசுவாமியே!—நிற்குத் தஞ்சம் என்று ஏரகம் தொழு - தேவரீருக்கு (அடியேன்) அடைக்கலம் என்று சொல்லி (அவர் எழுந்தருளியிருக்குந்) திருவேரகமலையை வணங்கு;—புவிக்கண் அஞ்சு பிறப்பு எனும் காய் வினை கண்டு அங்கு அந்தரமாக்கும் - (அது) பூமியின் கண்ணே அஞ்சத்தக்க பிறப்பென்று சொல்லப்படும் கொடிய வினையைக் கண்டு அப்பொழுதே முடிவுசெய்யும். எ - று. (உஅ)

காயந் தியங்கி புனைந்தே வருமதி கண்டுசெரு
காயந் தியங்கிய சொல்லா யினளயற் கன்னியர்ச
காயந் தியங்கிரி மன்னே ரகாவந்து காமடந்தை
காயந் தியங்கி யலையா தசுரர்க் களைந்தவனே.

(இ - ள்.) அசுரர்க் களைந்தவன் மன் அம் கிரி ஏரகா - அசுரர்களைக் கொன்றருளிய முருகக்கடவுள் வீற்றருளுகின்ற

அழகிய மலையாகிய திருவேரகத்தில் உள்ள தலைவனே!—மடந்தை - நம் பெண்ணானவள்,—காய் அந்தி அங்கி புனைந்து வரும் மதி கண்டு - சுடுகின்ற மாலைக்காலமாகிய அக்கினியைத்தரித்து வருகின்ற சந்திரனைக் கண்டு,—சருகாய் தியங்கி சொல்லாயினள் - உலர்ந்த இலைபோல் வாட்டமுற்று மயங்கிய சொற்களையுடையவளாயினள்!—அயல் கன்னியர் சகாயம் தீ - பக்கத்திலுள்ள தோழிப்பெண்கள் செய்கின்ற உபசாரங்களெல்லாம் அக்கினிபோலச் சுடுகின்றது;—காயம் தியங்கி அலையாது - (அவளுடைய) சரீரம் சோர்ந்து வருந்தாமல்,—வந்து கா-வந்து காத்தருளுக. எ - று. [தோழி தலைவி வருத்தம் தலைவனுக்குணர்த்தல்.] (உகூ)

முதலடியிலுள்ள எகாரம் தேற்றம். இரண்டாம் அடியிலுள்ள அம் சாரியை. மூன்றும் அடியில் தீ என்றது தி எனக் குறுக்கல்விகாரம்பெற்றது.

தவரா கமலையை முன்வளைத் தேபுரந் தன்னையெரித்
தவரா கமலை பணியா ரெகினந் தணிவில்சினத்
தவரா கமலைய நின்றார்க்கு ஞானந் தனைமுன்பகர்ந்
தவரா கமலைமன் னேரக வென்றுரை தாழ்மனதே.

(இ - ள்.) மனதே - மனமே!—முன் மலையைத் தவராக வளைத்துப் புரம் தன்னை எரித்தவர் - முன்னாளில் மகாமேருவை வில்லாகவளைத்துத் திரிபுரத்தை யெரித்தருளினவரும்,—ஆ கமலை பணியார் எகினம் - இசைபாடுகின்ற சாஸ்வதி வணங்குகின்ற பிரமதேவராகிய அன்னமும்,—தணி வில் சினத்த வராகம் - நீங்காத கோபத்தையுடைய விஷ்ணுமூர்த்தியாகிய வராகமும்,—அலைய நின்றார்க்கு - மேலும் கீழுந்தேடி அலையும்படி (அக்கினிமலையாக) நின்றருளினவருமாகிய சிவபெருமானுக்கு,—ஞானம் தனை முன் பகர்ந்தவர் - ஞானத்தை முன்

உபதேசித்தருளினவரே!—கமலை மன் ஏரக - மகாலக்ஷிமிவசிக்கின்ற திருவேரகமலையி லெழுந்தருளி யிருக்கின்றவரே!—என்று உரை - என்றுதுதி,—தாழ் - வணங்கு. எ - று. (௩0)

தேகா லயந்திர மாகப் பலகற்பந் தின்று கும்பித்
தேகா லயந்திரு நாட்டம்வைத் தென்கதி சேர்வையிப்போ
தேகா லயந்தி தொழுதிரு வேரகத் தேவைநினைந்
தேகா லயந்திறு சொற்போன் மெலிந்து நெஞ்சேயஞ்சுமே.

(இ - ள்.) ஐ அந்து இறு சொல்போல் மெலிந்து அஞ்சும் நெஞ்சே - சிலேத்துமமாகிய கிணற்றில் விழுந்துகிடக்கின்ற சொல்லைப்போல் மெலிவையடைந்து அஞ்சுகின்றமனமே!—தேக ஆலயம் திரமாகப் பல கற்பம் தின்று - சரீரமாகிய வீட்டை நிலையுடையதாக நினைத்துப் பலவகையாகிய கற்பங்களைத் தின்று,—காலைக் கும்பித்து - பிராணவாயுவைக் கும்பகஞ்செய்து,—திருநாட்டம் வைத்து - அழகிய நேத்திரேந்திரியத்தைப் பிரமரந்திரஸ்தானத்தி (லயப்படும்படி) வைத்து (யோகாப்பியாசஞ்செய்தலினால்),—என் கதி சேர்வை - என்னகதியை யடையப்போகின்றாய் (ஒன்றுமில்லை) ஆதலின்,—இப்போதே திருவேரகத்தேவை நினைந்து ஏகு - இப்பொழுதே திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்ற சுவாமிநாதக்கடவுளைத் தியானித்துக்கொண்டு செல்லு,—காலை அந்தி தொழு - காலையிலுமாலையிலும் போய் வணங்கு. எ - று. (௩௧)

இரண்டாமடியிலுள்ள ஏ அம் இரண்டும், நான்காமடியிலுள்ள ஆறும் அசைகள்.

அஞ்சங் கரிக்கு மருகனை யேரகத் தண்ணறனை [ல்
அஞ்சங் கரிக்கு நன்மைந்தனைப் போற்றுநெஞ் சேயன்பினு
அஞ்சங் கரிக்கு நடைகொங் கைய ரால்வருநோய்
அஞ்சங் கரிக்கும் பவந்தீர வேலை யனுப்புவனே.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!—அம் சங்கு அரிக்கு மருகனை—அழகிய சங்கைத்தரித்த விஷ்ணுமூர்த்திக்கு மருகரும்,—ஏரகத்து அண்ணல் தனை - திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்ற தலைவரும்,—அம் சங்கரிக்கு நல் மைந்தனை - அழகிய உமாதேவியாருக்கு நல்ல புத்திரருமாகிய குமாரக்கடவுளை,—அன்பினால் போற்று - அன்போடு துதி,—(அங்ஙனந்துதிப்பாயாயின்,)—அம்சம் கரிக்கு நிகர் நடை கொங்கையரால் வரும் நோய் - அன்னத்தையும் யானைக்கொம்பையும் ஒத்த நடையையும் ஸ்தனங்களையுமுடைய பெண்களால் வருந் துன்பமும்,—அங்கு அஞ்சு அரிக்கும் பவம் - அவ்விடத்தில் அஞ்சும்படி வருத்துகின்ற பிறவியும்,—தீர - நீங்கும்படி,—வேலை அனுப்புவன் - (அவர் தமது) வேலாயுதத்தை யனுப்பியருளுவர். எ-று.

கரி என்றது, கரியினது கொம்புக்கானது ஆகுபெயர்.

புவனங் கடாவுசெங் கோன்மன்ன நீநற் புதியகரும்
புவனங் கடாமென் றுழும்பண்ணை நாடணிப் பூவைசுனைப்
புவனங் கடாநிறை நாட்டின ளாரணம் போதற்குச்செப்
புவனங் கடாதை யெனுந்திரு வேரகன் பொன்மலைக்கே.

(இ - ள்.) நங்கள் தாதை - எங்கள் பிதாவும்,—ஆரணம் போதற்குச் செப்புவன் எனும் திருவேரகன் - வேதத்தைப் பிரமதேவருக்குபதேசித்தருளுவன் என்று சொல்லுகின்ற திருவேரகமலையிலெழுந்தருளி யிருக்கின்றவருமாகிய சுவாமிநாதக்கடவுளினது,—பொன்மலைக்கு - அழகிய மலையின்கணுள்ள,—புவனங்கள் தாவு செங்கோல் மன்ன - உலகங்களிற் செல்லுகின்ற செங்கோலையுடைய அரசர்களையொத்த தலைவனே!—நீ நல் புதிய கரும்பு வனம் கடா மென்று உழும் பண்ணை நாடன் - நீ நல்ல புதிய கருப்பஞ்சோலையை எருமைக்கடாக்கள் மென்று தின்று உழுகின்ற வயல்களாற் சூழப்பட்ட மருத

நிலநாடன்,—இப்பூவை சுனை கடாப் புவனம் நிறை நாட்டினள்- இப்பெண் சுனைகளிடத்தே மதஜலம் நிறையப்பெற்ற மலைநாட்டவள். எ - று. [குலமுறை கிளத்தி மறுத்தல்.] (௩௩)

மலைக்கு மாரவிடம் போற்புலன் போம்வழி வந்துபின்னு
மலைக்கு மாராமரஞ் செற்றோன் மருக வனக்குறவ
மலைக்கு மாரள நடைத்தெய்வ யானைக்கு மன்னவருண்
மலைக்கு மாரதிரு வேரகனே யென்றன் மான்மனமே.

(இ - ள்.) மராமரம் செற்றோன் மருக - மராமரத்தையழித்த விஷ்ணுமூர்த்தியின் மருகனே!—வனக் குற அமலைக்கும் மராள நடைத் தெய்வயானைக்கும் மன்ன - காட்டிலுள்ள குறவர்குலத்தில் அவதரித்த மலரகிதியாகிய வள்ளியம்மைக்கும், அன்னம்போன்ற நடையையுடைய தெய்வயானையம்மைக்கும் நாயகனே!—மலைக் குமரா - மலைகள்தோறும் வசிக்கின்ற குமாரக்கடவுளே!—திருவேரகனே - திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்றவனே!—என் தன் மான் மனம் - எனது மான்போன்ற பெண்ணினது மனதை,—புலன் அரா விடம் போல் போம் வழி வந்து மலைக்கும் - ஐம்புலன்களும் பாம்பினது விஷம்போல் செல்லுமார்க்கத்தில் வந்து தடுமாறச்செய்கின்றது;—பின்னும் அலைக்கும் - அதன்பின்னும் வருத்துகின்றது;—அருள் - (ஆதலின், அவ்வாறு வருத்தாமல் அனுக்கிரகஞ் செய்தருளும். எ - று. [தெய்வந்தொழுதல்.] (௩௪)

மனவா ரணங்கு திகழீசன் மைந்தவென் மட்டடங்கா
மனவா ரணங்கை வசமாவ தென்றுசொன் மாமலராண்
மனவா ரணம்பர வேரக னேதெய்வ யானைவள்ளி
மனவா ரணங்கரத் தேந்திய சேவக வானவனே.

(இ - ள்.) மன - (அடியார்களுடைய) இருதயத்தில் வசிப்பவரே!—ஆரணங்கு திகழ் ஈசன் மைந்த - உமாதேவியாருக்

கும் விளங்குகின்ற சிவபெருமானுக்கும் புத்திரரே!—மாமலராள் மன் அ ஆரணம் பரவு ஏரகனே - பெருமைபொருந்திய தாமரைமலரில் வசிக்கின்ற மகாலட்சுமிக்கு நாயகராகிய விஷ்ணுமூர்த்தியும் அந்த வேதங்களுந் துதிக்கின்ற திருவேரகமலையிலெழுந்தருளி யிருக்கின்றவரே!—தெய்வயானை வள்ளி மனதெய்வயானையம்மைக்கும் வள்ளியம்மைக்குந் தலைவரே!—வாரணம் கரத்து ஏந்து சேவக வானவனே - கோழிக்கொடியைத் திருக்கரத்திலேந்திய வீரத்தன்மையையுடைய தேவரே!—என் மட்டு அடங்கா மன வாரணம் கைவசப் படுவது என்று - அடியேனுக்குள் அடங்காத மனமாகிய யானை என் கைவசப்படுவது எப்பொழுது?—சொல் - திருவாய்மலர்ந்தருளும். எ - று. (நடு)

மன்ன என்பது மன என வந்தது இடைக்குறை,

வானவ னந்த னுலகோ டெலாமுய்ய மாவைவென்ற
வானவ னந்தன் மருகன் முருகன் மயிற்பரியான்
வானவ னந்த வனஞ்சூழ் மேரக வள்ளறரு
வானவ னந்த மணமாலை நீயஞ்சன் மாதரசே.

(இ - ள்.) மாது அரசே - பெண்ணரசியே!—வான உலகு அனந்தன் உலகோடு எலாம் உய்ய மாவை வென்ற வானவன் - தேவலோகமும், ஆதிசேஷனுடைய உலகமாகிய பாதாளலோகமும், (மற்றுள்ள) எல்லா உலகங்களும் பிழைக்கும்படி மாமரவடிவாகிய (சூரபத்மனை) வென்றருளிய தேவரும்,—நந்தன் மருகன் - சங்கைத்தரித்த விஷ்ணுமூர்த்தியினுடைய மருகரும்,—முருகன் - இளமைப்பருவத்தையுடையவரும்,—மயில் பரியான் - மயிலைக் குதிரையாகக்கொண்டு செலுத்துகின்றவருமாகிய சுவாமிநாதக்கடவுள் எழுந்தருளியிருக்கின்ற,—வான அநந்தவனம் சூழும் ஏரக வள்ளல் அவன் - ஆகாயத்தையளாவுகின்ற அந்த நந்தவனங்களாற் சூழப்பட்ட திருவேரகமலையி

லுள்ள கொடையாளனாகிய அத்தலைவன்.—அந்த மண மாலை தருவான் - அந்த மணமாலையைத் தருவான்;—நீ அஞ்சல் - நீ பயப்படாதே. எ - று. [தோழியாற்றுவித்தல்.] (௩௬)

உலகு என்பதனை வான என்பதோடு கூட்டப்பட்டது.

மாதனந் தங்க மலைபோல விம்ம மயங்குவள்சும்
மாதனந் தங்க மலைகண்டு நாண வடிவுகொண்ட
மாதனந் தங்க வலைசொல் லியுமினம் வஞ்சகமா
மாதனந் தங்க வளமல்கு மேரகம் வாழ்குகற்கே.

(இ - ள்.) தனம் தங்க வளம் மல்கும் ஏரகம் வாழ் குகற்கு- திரவியங்கள் தங்கும்படியான வளப்பங்கள் நிறைந்த திருவேர கமலையில் வாழுகின்ற முருகக்கடவுளையொத்த தலைவனே!— தன் அந்தம் கமலை கண்டு நாண வடிவு கொண்ட மாது - தனது அழகை மகாலட்சுமிகண்டு நாணும்படியான உருவத்தைக் கொண்ட நம் பெண்ணனவள்,—மா தனம் தங்க மலைபோல விம்ம - பருத்த தனங்களானவை பொன்மலையைப்போலப் பூரிக்க,— சும்மா மயங்குவள்-வாளா மயக்கமடைவாள்,—அனந்தம் கவலை சொல்லியும் - (அவளுடைய) முடிவில்லாத விதனங்களை யெடுத்துச் சொல்லியும்,—இனம் வஞ்சகம் ஆமா - இன்னமும் இந்த வஞ்சகம் உனக்கு ஆகுமா? எ - று. [பாங்கிக் கொடுஞ்சொற் கூறல்.] (௩௭)

இன்னம் என்பது இனம் என வந்தது இடைக்குறை. குகற்கு என்ற நான்காம் வேற்றுமை எட்டாம்வேற்றுமையாக மயங்கிற்று.

குகநக மாவை யடுஞ்சே வகன்முனங் கோவினுக்காங்
குகநக மாநற் குடைகொண் டவன்மரு கன்கொண்டலோங்
குகநக மாளிகை சூழே ரகனைக்கும் பிட்டுவணங்
குகநக மானெஞ் சமேநீங் கும்பாசக் கொடுங்கரவே.

(இ - ள்.) நகம் ஆம் நெஞ்சமே - மலைபோன்ற (கடின) மாகிய மனமே!—குகன் - குகன் என்னுந் திருநாமத்தையுடையவனும்,—அகம் மாவை அடும் சேவகன் - கர்வத்தையுடைய மாமரவடிவாகிய சூரபத்மனைக் கொன்ற வீரத்தன்மையுடையவனும்,—முனம் கோவினுக்கு உக நகம் மா நல் குடை கொண்டவன் மருகன் - முன்னே பசுக்களுக்குச் சந்தோஷமுண்டாக, கோவர்த்தனகிரியை பெரிய நல்ல குடையாகக்கொண்ட விஷ்ணுமூர்த்தியினுடைய மருகனும்,—கொண்டல் ஓங்கு கனக மாளிகை சூழ் ஏரகனை - மேகமண்டலம்வரையில் உயர்ந்தோங்கிய பொன்மயமாகிய மாளிகைகளாற் சூழப்பட்ட திருவேரகமலையில் எழுந்தருளி யிருக்கின்றவனுமாகிய சுவாமிநாதக்கடவுளை,—கும்பிட்டு வணங்குக - அஞ்சலிசெய்து நமஸ்கரிக்கக் கடவாய்;—பாசக் கொடும் கரவு நீங்கும் - பாசமாகிய கொடிய வஞ்சகம் நீங்கும். எ - று. (௩அ)

முதலடியிலுள்ள ஆங்கு அசை.

கரவாக மஞ்சனங் கொண்டுனைப் பூசிக்குங் கள்வனயிற்
கரவாக மஞ்சன மான்மரு காநின் கழல்பெறல்சக்
கரவாக மஞ்ச நடைமுலை யாம்வள்ளி காந்தசடாக்
கரவாக மஞ்செறி யேரக யானெந்தக் காலத்திலே.

(இ - ள்.) அயில் கர - வேலாயுதம்பொருந்திய திருக்கரத்தையுடையவரே!—ஆகம் மஞ்சு அன மால் மருகா - சரீரமானது மேகம்போலப்பொருந்திய விஷ்ணுமூர்த்தியின்மருகரே!—சக்கரவாக அம்ச முலை நடை ஆம் வள்ளி காந்த - சக்கரவாகப் பக்ஷியையும் அன்னத்தையுமொத்த முலைகளையும் நடையையுமுடைய வள்ளியம்மைக்கு மணவாளனே!—சடாக்ஷர ஆகமம் செறி ஏரக - சடாக்ஷர ஓசையும் சிவாகம ஓசையும் பொருந்திய திருவேரகமலையிலெழுந்தருளி யிருக்கின்றவரே!—கரவு ஆக

மஞ்சனம் கொண்டு உனைப் பூசிக்கும் கள்வன் - வஞ்சகமாகத் திருமஞ்சனங்கொண்டு தேவரீரைப் பூசிக்கின்ற கள்வனாகிய அடியேன்,—எந்தக் காலத்தில் நின் கழல் பெறல் - எக்காலத்தில் தேவரீரது திருவடிகளை யடைதல். எ - று. (௩௯)

சடாக்ஷரம் ஆகமம் என்பன அறற்றின் ஓசைக்கானது ஆகுபெயர்கள்.

காலனஞ் சத்தி முனிந்தா லெனநமைக் காயவருங்
காலனஞ் சத்தி கழும்வேல் விடுப்பன் கமலமலர்க்
காலனஞ் சத்திக் குமேரக மேவிய கந்தன்றண்டைக்
காலனஞ் சத்தி தருஞ்சே யைப்போற்றுங் கனவினுமே.

(இ - ள்.) கமல மலர்க்கால் அனம் சத்திக்கும் ஏரகம் மேவிய கந்தன் - தாமரைமலர்களிடத்தே பொருந்திய கால்களையுடைய அன்னங்கள் ஒலிக்கின்ற திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கின்ற கந்தசுவாமியும்,—தண்டைக் காலன் - பாதச் சிலம்பையணிந்த திருவடிகளையுடையவனும்,—நம் சத்தி தரும் சேயை - நமது உமாதேவியார் பெற்றருளிய குமாரருமாகிய முருகக்கடவுளை,—கனவினும் போற்றுங்கள் - சொப்பனத்திலும் மறவாமற்றுதியுங்கள்,—அத்தி கால் அ நஞ்சு முனிந்தால் என - திருப்பாற்கடலினின்றுந் தோன்றிய அந்த ஆலகாலமானது கோபித்து வந்தாற்போல,—நமைக் காய வரும் காலன் அஞ்சத் திகழும் வேல் விடுப்பன் - நம்மைக் கொல்லும்படி வருகின்ற இயமன் பயப்படும்படி விளங்காநின்ற வேலாயுதத்தைச் செலுத்தியருளுவன். எ - று. (௪௦)

கனவா கவிக்குலச் சீரூர்செல் வத்தைக் கருதசுரர்
கனவா கவிக்கும் வடிவேல வள்ளி கணவசிறக்க
கனவா கவிக்கு வனஞ்சூழு மேரகக் கார்மயில்வா
கனவா கவிக்கருள் கந்தாவென் பாயுல கத்தினெஞ்சே.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!—உலகத்தில் கனவு ஆக இக்குலம் சீர் ஊர் செல்வத்தைக் கருது அசுரர் கனவாகு அவி க்கும் வடிவேல - இவ்வுலகத்தின்கண்ணே சொப்பனம்போலத் (தோன்றி மறையத்தக்க) இக்குலத்தையும் சிறப்பையும் ஊரை யும் பொருளையும் (பெருஞ்சம்பத்தாக) நினைக்கின்ற அசுரர்க ளுடைய பருத்த புஜபலத்தை அழிக்கின்ற கூர்மைபொருந்திய வேலாயுதத்தையுடையவனே!—வள்ளி கணவ - வள்ளியம்மை க்கு நாயகனே!—சிற் ககன ஆக - ஞானகாசசொரூபியே!— இக்கு வனம் சூழும் ஏரக - கருப்பஞ்சோலைகளாற் சூழப்பட்ட திருவேரகமலையிலெழுந்தருளி யிருக்கின்றவனே!—கார் மயில் வாகன - கருநிறம்பொருந்திய மயில்வாகனத்தையுடையவனே!- கந்தா - கந்தசுவாமியே!—வா - (அடியேனுக்குமுன்) வந்த ருள்,—கவிக்கு அருள் - அடியேன் பாடலுக்குத் திருவருள் செய்தருள்,—என்பாய் - என்று துதிப்பாயாக. எ - று. (சச)

கத்திக் கத்திக்கு நிகர்விழி யார்நிதங் கண்டுவக்
கத்திக் கத்திக் கிணையாய்நடக் கின்றவிற் காமனென்று
கத்திக் கத்திக் குணமில்லா ரைப்பாடியென் கண்டனம்பா
கத்திக் கத்திப் பியவாரிசெய் யேரகற் காண்மின்களே.

(இ - ள்.) குணம் இல்லாரை - நற்குணமில்லாதவர்களை,— கத்திக்கு அத்திக்கு நிகர் விழியார் நிதம் கண்டு உவக்கும் - வாளுக்குங் கருவிளமலருக்குஞ் சமானமாகிய கண்களையுடைய பெண்கள் நாள்தோறுங் கண்டு விரும்புகின்ற,—அ திக்கு அத் திக்கு இணையாய் நடக்கின்ற வில் காமன் என்று - அந்தத் திக் குயானைக்கு ஒப்பாக நடக்கின்ற வில்லையுடைய மன்மதனே என்று சொல்லி,—கத்திக் கத்திப் பாடி என் கண்டனம் - கத றிக் கதறிப் பாடி என்னபிரயோசனத்தைக் கண்டோம்.— (ஒன்றுமில்லையாதலின்,)—பாகு அத்திக்குத் திப்பிய வாரி செய்

ஏரகன் காண்மின்கள் - கருப்பஞ்சாறுகடலுக்குச் சமானமாய் விளங்கும்படி பெருகியோடுகின்ற வயல்களாற் சூழப்பட்ட திருவேரகமலையிலெழுந்தருளி யிருக்கின்ற சுவாமிநாதக்கடவுளைத் தரிசியுங்கள். எ - று. (சஉ)

களவனை யாவி கவர்ந்தோ னுடலங் கவினுடைமை
களவனை யான்மரு காவே ரகாச களாவுயர்நிட்
களவனை யாயினிச் சென்மங்க ளென்று கழறுமின்கை
களவனை யாதரத் தோடஞ் சலிப்பக் கதிவருமே.

(இ - ள்.) களவனை ஆவி கவர்ந்தோன் - வஞ்சகத்தன்மையுடைய இராவணனது உயிரைக் கவர்ந்தவனும்,—உடலம் கவின் உடைமை களவு அனையான் மருகா - சரீரமானது அழகுபொருந்திய கரிய களாப்பழம்போன்றவனுமாகிய விஷ்ணுமூர்த்தியினுடைய மருகனே!—ஏரகா - திருவேரகமலையிலெழுந்தருளி யிருக்கின்றவனே!—சகளா - சகளவடிவத்தையுடையவனே!—நிட்களா - நிட்களவடிவத்தையுடையவனே!—அனையாய் - தாய்போன்றவனே!—என்று கழறுமின் - என்று சொல்லித் துதியுங்கள்,—கைகள் அவனை ஆதரத்தோடு அஞ்சலிப்ப- கைகளினாலே அச் சண்முகக்கடவுளை அன்போடு அஞ்சலிசெய்ய,—இனிச் சென்மங்கள் கதிவரும் - இனிமேல்வரும் ஜென்மங்கள் நீங்கும். எ - று. (சங)

அன்னையான் என்பது, அனையான் என வந்தது இடைக்குறை. சுப்பிரமணியக்கடவுளுக்குச் சகள நிட்கள வடிவ முண்டென்பதை "அருவமு முருவுமாகி" என்னும் கந்தபுராணச்செய்யுளா னுணர்க.

வருந்தா மரையயன் வாசவ னார்தொழ வாழ்குவர்யா
வருந்தா மரைதிரி கானக் குறவர்ம கண்மணங்க
வருந்தா மரைநற் றிருவே ரகமே மருதிருக்கில்
வருந்தா மரைநொடிப் போதுநெஞ் சேசென்மவாரிக்குள்ளே

(இ - ள்.) நெஞ்சே - மனமே!—யாவரும் - எல்லாரும்,—தா மரை திரிகானக் குறவர் மகள் மனம் கவரும் - தாவுகின்ற மரைகள் சஞ்சரிக்கின்ற காட்டினிடத்துள்ள குறவர்களுடைய மகளாகிய வள்ளிநாயகியினது மனதைக் கவருகின்ற,—தாமரை நல் திரு ஏரகரை - தாமரையாசனத்திலிருக்கின்ற நல்ல மகாலட்சுமி வசிக்கத்தக்க திருவேரகமலையிலெழுந்தருளி யிருக்கின்ற சுவாமிநாதக்கடவுளை,—மறாது இருக்கில் - மறவாதிருப்பார்களாயின்,—சென்ம வாரிக்குள் அரைநொடிப் போதும் வருந்தாம் - பிறவிக்கடலில் வீழ்ந்து அரைக்ஷணப்பொழுதும் வருந்தாமல்,—வரும் தாமர் - வருகின்ற கவுத்துமாலையை யணிந்த விஷ்ணுமூர்த்தியும்,—ஐ அயன் - அழகிய பிரமதேவரும்,—வாசவனார்—தேவேந்திரனும்,—தொழ வாழ்குவர் - வணங்கும் படி வாழ்வார்கள். எ - று. (௩௩)

வாரிக் குவலே வளைத்தே யுருவிலி வந்துவந்து
வாரிக் குவலையத் துக்கிணை யாங்கண் மடந்தைதன்மேல்
வாரிக் குவலய மெய்யநைந் தாடமர் வம்பினிச்சொல்
வாரிக் குவலையம் வாழ்த்தே ரகமலை வாழ்கந்தனே.

(இ - ள்.) இக் குவலையம் வாழ்த்து ஏரக மலை வாழ் கந்தனே - இப்பூமியிலுள்ளவர்களால் துதிக்கப்பட்ட திருவேரக மலையில் வாழ்கின்ற கந்தசுவாமியே!—உருவிலி வார் உவலை இக்கு வளைத்து வந்து உவந்து ஆடு அமர் - மன்மதனுனவன் நீண்டு தழைத்த கரும்பை வில்லாகவளைத்து எதிர்த்து வந்து சந்தோஷத்தோடு செய்கின்ற யுத்தத்தில்,—வார் இக்கு வலயத்துக்கு இணையாம் கண் மடந்தை தன்மேல் - ஜலத்தை மடக்குகின்ற கடலுக்கு ஒப்பாகிய கண்களையுடைய பெண்ணின் மேல்,—குவலயம் வாரி எய்ய - நீலோற்பலபாணத்தை யெடுத்துப் பிரயோகம்பண்ணுதலால்,—இனி நைந்து வம்பு சொல்

வார் - இனிமேல் வருந்தி பழிமொழிகளைச் சொல்லுவார்கள்.
எ - று. [தோழிகூற்று.] (௪௫)

முதலடியிலுள்ள ஏகாரம் அசை. கந்தனே - என்பதற்கு கட்டுத்தறியையொத்த புஜபலத்தையுடைய தலைவனே என்று துறைலக்ஷணத்துக்குத்தக்க பொருள்கொள்க.

கந்தனந் தந்தம் பெறத்தரித் தான்மரு கன்குழன்மே
கந்தனந் தந்த முலைமலை யாம்வள்ளி காந்தற்கன்பு
கந்தனந் தந்தமிழ் சொல்லே ரகந்தொழு கன்னியர்மோ
கந்தனந் தந்தன மென்றுநெஞ் சேயுட் கருதுவையே.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!—கன்னியர் மோகம் தன் அந்தம் தனம் என்று உள் கருதுவை - பெண்களுடைய ஆசையே உனக்கு நிச்சயமானசெல்வம் என்று உன்னுள்ளே நினைப்பை. (அந்நினைப்புப்பயனில்லையாதலின்,)—கந்தன் - கந்தசுவாமியும்,—நந்து அந்தம் பெறத் தரித்தான் மருகன் - சங்கை அழகுபொருந்தத் (திருக்கரத்திற்) றரித்த விஷ்ணுமூர்த்தியின் மருகனும்,—குழல் மேகம் தனம் மலை தந்த முலை ஆம் வள்ளி காந்தற்கு அன்பு உகந்து - கூந்தல் மேகம்போலவும் முலைகள் மலைபோலவும் பற்கள் முல்லையரும்புபோலவும் உடைய வள்ளிநாயகிக்கு மணவாளனுமாகிய முருகக்கடவுளுக்குப் பத்திசெய்து,—அனந்தம் தமிழ் சொல் ஏரகம் தொழு - அளவில்லாத தமிழ்ப்பாக்களாற் றுதிக்கப்பட்ட திருவேரகமலையை வணங்கு.

முல்லை என்பது முலையென வந்தது இடைக்குறை.

கருமங் குலங்கல்வி யெல்லா மறந்து கமலங்கணி
கருமங் குலவுநின் றாள்போற்ற லென்று கடலுமரக்
கருமங் குலத்த லுறக்கணை யேவுகண் ணன்மருகா
கருமங் குலமரு மாளிகை யேரகக் காவலனே.

(இ - ள்.) கடலும் அரக்கரும் அங்கு உலந்தல் உறக்கணை ஏவும் கண்ணன் மருகா - சமுத்திரமும் இராக்கதர்களும் அவ்விடத்திலழியும்படி பாணங்களைச் செலுத்திய விஷ்ணுமூர்த்தியின் மருகனே! —கரு மங்குல் அமரும் மாளிகை ஏரகக் காவலனே - கரிய மேகங்கள்பொருந்திய மாளிகைகளையுடைய திருவேரகத்தில் எழுந்தருளியிருக்குந் தலைவனே!—கருமம் குலம் கல்வி எல்லாம் மறந்து - கருமங்களும் வம்சமும் கல்வியுமாகிய இவைகளெல்லாமறந்து,—கமலங்கள் நிகரும் அம் குலவு நின் தாள் போற்றல் என்று - செந்தாமரைமலரையொத்த அழகு பொருந்திய தேவரீரது திருவடிகளைத் துதிப்பது எக்காலம்?

காவல வாமைக் கடன்மூழ்கி மேய்ந்தெழு கார்வருமுன்
காவல வாயிற் கலங்குவ னென்றனள் கன்னிமெய்நீங்
காவல வாமணித் தேர்விரைந் தோடக் கடாவுகைவா
காவல வாபொன்னி சூழே ரகத்தன் கனவரைக்கே.

(இ - ள்.) வலவா - பாகனே!—கன்னி - தலைவியானவள்,—காவல் அவா மைக் கடல் மூழ்கி மேய்ந்து எழு கார் வரும் முன் - (இந்திரனுடைய) காவலை விரும்பிய மேகங்கள் சமுத்திரத்தில் முழுகி (நீரைக்) குடித்து எழும்புகின்ற கார்காலம் வருமுன்,—கா - காத்துக்கொள்,—அலவாயின் கலங்குவன் என்றனள் - அவ்வாறு காவாயாயின், துன்பப்படுவேன் என்று சொன்னாள்,—மெய் - இது சத்தியம்,—அவா நீங்கா அலவாம்- அவளுடைய ஆசை நீங்கமாட்டாவாம்,(ஆதலின்,)—பொன்னி சூழ் ஏரகத்தன் கனவரைக்கு - காவேரிநதியாற் சூழப்பட்ட திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற சுவாமிநாதக்கடவுளுடைய பெரிய மலையினிடத்தே,—கை வாகா மணித்தேர் விரைந்து ஓடக் கடாவு - கைவாகாக அழகிய தேரை விரைந்து ஓடும்படிச் செலுத்துக. எ - று. [தலைவன் பாகனொடுகூறல்.]

அல்லவாயின் என்பது அலவாயின் என்றதும் அல்லவாம் என்பது அலவாம் என்றதும் இடைக்குறை.

கனகங் களிக்கு வெறுப்பா கியதனங் கைத்தனள்கோ
கனகங் களிக்கு வனஞ்சூழ் மேரகன் காயரிமு
கனகங் களிக்கு வலயத் தழித்த கதிரயிற்கு
கனகங் களிக்கும் படிசொல்லு வீரெழு கார்க்குலமே.

(இ - ள்.) எழு கார்க் குலமே - தோன்றுகின்ற மேகக் கூட்டங்களே!—கோகனகங்கள் இக்கு வனம் சூழும் ஏரகன் - தாமரைத்தடாகங்களாலும் கருப்பஞ்சோலைகளாலுஞ்சூழப்பட்ட திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்றவரும்,—காய் அரி முகன் அகங்கள் இக்குவலயத்து அழித்த கதிர் அயில் குகன் - கோபத்தையுடைய சிங்கமுகாசுரனது கர்வங்களை இப்பூமியினிடத்து அழித்த ஒளிபொருந்திய வேலாயுதத்தையுடையவருமாகிய சண்முகக்கடவுளையொத்த தலைவனுக்கு,—அகம் களிக்கும் படி - மனம் சந்தோஷிக்கும்படி,—கனகங்கள்-(நம்தலைவிக்குப்) பொன்னாற்செய்த ஆபரணங்களும்,—இக்கும் - சருக்கரையும்,—வெறுப்பாகியது - வெறுப்பாகிவிட்டது;—அனம் கைத்தனள் - அன்னத்தையும் வெறுத்துவிட்டாள்,—சொல்லுவீர் - சொல்லுங்கள். எ - று. [முகிலோடுகூறல்.] (௩௧)

கோகனங்கள் என்றது அதனையுடைய தடாகத்துக்கானதும், இக்கு என்பது சருக்கரைக்கானதும் ஆகுபெயர். அன்னமென்பது அனமெனவந்தது இடைக்குறை.

காரணங் காகன் முதலோர்க்கு மற்றிலைக் கந்தனன்றிக்
காரணங் காக வுணவுட லீர்வணி கன்றந்தவக்
காரணங் காகச்செய் யேரக வேலனைக் கைதொழுநீங்
காரணங் காகரு டணஞ்செய் தாலுறுங் கண்வருமே.

(இ - ள்.) காக உணவு உடலீர் - காகங்களுக்கு உணவா யுள்ள சரீரத்தையுடைய மனிதர்களே!—வணிகன் தந்த அக்கு ஆரணங்காகச் செய் ஏரக வேலனை - (சீர்காழியில் திருஞான சம்பந்தமூர்த்தியாகத்தோன்றி) சிவநேசச்செட்டியாரால் கொ டுக்கப்பட்ட எலும்பைப் பெண்ணாகச்செய்து திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற வேலாயுதத்தையுடைய சுவாமிநாதக் கடவுளை,—கை தொழும் - கைகூவித்து வணங்குங்கள்,—கார் அணங்கு ஆகன் முதலோர்க்கும் - மேகம்போன்ற அழகிய சரீ ரத்தையுடைய விஷ்ணுமூர்த்திமுதலிய தேவர்களுக்கும்,—கந் தன் அன்றி மற்று இலை - கந்தசுவாமியையேயன்றி வேறுதெய் வமில்லை.—காரணம் - இக்காரணத்தால்,—அணங்கு நீங்கார் ஆகருடணம் செய்தாலும் - நீங்கள் துன்பத்தினின்று நீங்காத வர்களாய் அழைத்தாலும்,—நம் கண் வரும் - உங்களிடத்து வந்து அனுக்கிரகஞ்செய்வன்; (ஆதலால்.) எ - று. (௩௰)

கண்ணனை யானனன் வேதன் றுதிகுக னைப்பனிரு
கண்ணனை யானந்த வாழ்வே ரகனைப் கமலத்தெழிற்
கண்ணனை யானற் றனம்வயி றும்வள்ளி காந்தனையென்
கண்ணனை யானவ னைமற வேன்பிற வாக்கதிக்கே.

(இ - ள்.) கண்ணன் ஐ ஆனனன் வேதன் துதி குகனை - விஷ்ணுமூர்த்தியும் ஐந்து முகங்களையுடைய சிவபெருமானும் பிரமதேவனும் புகழ்கின்ற குகன் என்னும் திருநாமத்தையுடை யவனும்,—பன் இரு கண்ணனை - பன்னிரண்டு திருக்கண்களை யுடையவனும்,—ஆனந்தவாழ்வு ஏரகனை - (தன்னையடைந்த அடியார்களுக்குப்) பேரானந்தப் பெருவாழ்வைக் கொடுக்கின்ற திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்றவனும்,—எழில் கம லம் கண் நனை தனம் நல் ஆல் வயிறு ஆம் வள்ளி காந்தனை-அழ கிய தாமரைமலர்போன்ற கண்களையும், அவ்வரும்பு போன்ற

முலைகளையும், நல்ல ஆலிலை போன்ற வயிற்றையும் உடைய வள்ளிநாயகிக்கு நாயகனும்,—என் கண் அனையான் - என்கண் போன்றவனுமாகிய,—அவனை - அச் சுவாமிநாதக்கடவுளை,—பிறவாக்கதிக்கு மறவேன் - இனிப் பிறவியெடாமல் மோக்ஷத்தை அடையும் பொருட்டு (அடியேன்) மறவாமல் தியானிப்பேன். எ - று. (௩௧)

பன்னிரு என்பது, பனிரு என வந்தது இடைக்குறை.

வாச மனஞ்ச லசவத னக்குற மங்கைவிசு
வாச மனஞ்ச வயலே ரகாமயி லேறியென்முன்
வாச மனஞ்ச வுதைத்தோன் றன்மைந்த மலைகடொறும்
வாச மனஞ்ச லியாதொழி சென்ம வலைத்திருக்கே.

(இ - ள்.) வாசம் மன் அம் சலச வதனக் குறமங்கை விசுவாச மன் - வாசனைபொருந்திய அழகிய தாமரைமலர்போன்ற முகத்தையுடைய குறவர்குலத்திற் பிறந்த வள்ளிநாயகியினிடத்து விசுவாசமுடைய தலைவனே!—அம்ச வயல் ஏரகா - அன்னங்கள் வசிக்கின்ற வயல்களையுடைய திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்றவனே!—சமன் அஞ்ச உதைத்தோன் தன் மைந்த - இயமனானவன் பயப்படும்படி உதைத்தருளிய சிவபெருமானது புத்திரனே!—மலைகள் தொறும் வாச - மலைகள்தோறும் வசிப்பவனே!—மயில் ஏறி என் முன் வா - மயிலின்மேலெழுந்தருளித் (தமியேன்) முன் வந்தருள்,—மனம் சலியாது சென்ம வலைத் திருக்கு ஒழி - மனம் சலியாமல் பிறவிவலையாகிய குற்றத்தை யொழித்தருள். எ - று. (௩௨)

திருக்கு மதிமுக வாய்பெற்று நிற்றெறி சித்திலர்பொய்த்
திருக்கு மதியர் துதியாரக் காலன்முன் செய்யவெங்க
திருக்கு மதிகச் சுடர்வேல நாளுந் திருமகள்வீத்
திருக்கு மதிற்றிரு வேரக வென்செய்கு வாரவரே.

(இ - ள்.) செய்ய வெங்கதிருக்கும் அதிகச் சுடர் வேல - செந்நிறம்பொருந்திய சூரியனொளியினும் அதிக ஒளியையுடைய வேலாயுதத்தையுடையவனே!—நாளும் திருமகள் வீத்திருக்கும் மதில் ஏரக - எப்பொழுதும் மகாலட்சுமிவீற்றிருக்கின்ற மதில்களையுடையதிருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்றவனே!—மதி முகம் வாய் திருக்குப் பெற்று நின் தெரிசித்திலர் - சந்திரன்போன்ற முகமும் வாயும் வேறுபாட்டையடைந்து தேவரீரைத் தரிசியாதவர்களும்,—பொய்த்து இருக்கும் மதியர் - பொய்ம்மைபொருந்திய அறிவையுடையவர்களும்,—துதியார் - துதியாதவர்களும்,—அவர் - (ஆகிய) அவர்கள்,—அக்காலன் முன் என் செய்குவார்-அந்த இயமன்(வரும்போது) அவன் முன் என்னசெய்வார்கள். எ - று. (௩௫)

வீற்றிருக்கும் என்பது எதுகைநோக்கி வீத்திருக்கும் என்று வந்தது.

வரா மருந்தனத் தார்கேட் கிலேரகம் வாழ்த்திக்கவி
வார மருந்தன மில்விர தஞ்செய் துபவளத்து
வார மருந்தன சொல்லாளை யான்பெற்ற வாறிகழு
வார மருந்தனங் கன்போன்ற வன்பின் வனஞ்சென்றதே.

(இ - ள்.) அருந்து அம் அனம் இல் விரதம் செய்து - உண்ணும்படியான சலமும் அன்னமும் இல்லாமல் (உபவாச) விரதத்தை யநுஷ்டித்து,—பவளத்து ஆர மருந்து அன சொல்லாளை -(வாயாகிய) பவளக்கிண்ணத்தில் நிறைந்த அமிர்தம் போன்ற சொல்லையுடைய இப்பெண்ணை,—யான் பெற்ற வாறு - யான் பெற்ற விதத்தையும்,—அமர் உந்து அனங்கன் போன்றவன் பின் வனம் சென்றதும் - (அவள்) யுத்தத்தைச் செய்கின்ற மன்மதனையொத்த தலைவன் பின்னே (தனித்துப்) பாலைநிலத்திற் சென்றதையும்,—ஏரகம் வாழ்த்திக் கவிவார் -

திருவேரகமலையைத் துதித்துப் பிரதக்ஷிணம் வருகின்றவர்களா கிய,—வார் அமரும் தனத்தார் கேட்கில் இகழும் - கச்சுப்பொ ருந்திய தனங்களையுடைய பெண்கள் கேட்டால் இகழ்வார்கள்; (என்செய்வேன்.) எ - று. [தலைவி சுரஞ்செலக்கண்ட நற்றா யிரங்கல்.] (ருச)

அன்னம் என்பது அனம் எனவந்தது இடைக்குறை.

வனக மனகன தனத்தா ராசை வழிமயங்கு
வனக மனகம் வருவதெந் நாளசு ரன்மடிய
வனக மனக வொளிர்வா ளெனக்கொண்ட மான்மருகா
வனக மனகவி னேரகம் வாழ்மயில் வாகனனே.

(இ - ள்.) அசுரன் மடிய வல் நகம் மன் நக வொளிர்வாள் எனக் கொண்ட மால் மருகா - இரணியாசுரன் இறக்கும்படி வலிய நகமானது, நிலைபெற்றுவிளங்கும்படி பிரகாசிக்கின்ற வாள்போலக் கொண்ட விஷ்ணுமூர்த்தியினுடைய மருகனே!— அனக மன - ஆணவமில்லாத மனத்தையுடையவனே!—கவின் ஏரகம் வாழ் மயில் வாகனனே - அழகுபொருந்திய திருவேரக மலையில் வாழ்கின்ற மயில்வாகனத்தையுடையவனே!—வல் நகம் அன கன தனத்தார் ஆசை வழி மயங்குவன் அகம் - சொக்கட் டாங்காயையும் மலையையும் ஒத்த பருத்த தனங்களையுடைய பெண்களினது ஆசைவழியிற் சென்று மயங்குகின்றவனாகிய அடியேன் மனம்,—அனகம் வருவது எந்நாள் - பாவங்களின்று நீங்குவது எக்காலம். எ - று. (ருரு)

அன்ன என்பது அன என வந்தது இடைக்குறை.

கனந்தங்கந் தந்தம் புயங்கா விடைமெய் கவினளகங்
கனந்தங்கந் தந்தந் திகழாடி யெனவுருக் காட்டவணி
கனந்தங்கந் தந்தந் தனைக்கன்னி யாக்கிய காங்கெயன்கு
கனந்தங்கந் தன்றிரு வேரக னேசுரர் காவலனே.

(இ - ள்.) கனம் கவின் அளகம் - மேகம்போன்ற அழகிய கூந்தலும்,—தங்கம் மெய் - பொன்போன்ற சரீரமும்,—தந்து இடை - நூல்போன்ற இடையும்,—அம்புயம் கால் - தாமரை மலர்போன்ற பாதங்களும்,—அந்தம் தங்கு திகழ் ஆடி கனம் - அழகுபொருந்திவிளங்காநின்ற கண்ணாடிபோன்ற கன்னங்களும்,—என தம் உருவு காட்ட - என்று சொல்லும்படி தம்முடைய வடிவந்தோன்ற,—வணிகன் தந்த நந்து அங்கம் தனை கன்னி ஆக்கிய காங்கெயன் - சிவநேசச்செட்டியாரால் கொடுக்கப்பட்ட இறந்த பெண்ணினுடைய எலும்பைப் பெண்ணாக்கிய திருஞானசம்பந்தராக அவதரித்த கங்காபுத்திரனும்,—குகன் - குகன் என்னுந் திருநாமத்தையுடையவனும்,—நம் தம் கந்தன் - நமது கந்தசுவாமியுமாகிய,—திருவேரகனே - திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற சுவாமிநாதக்கடவுளே,—சுரர் காவலன் - தேவர்களைக் காக்கவல்லவன். எ - று. (௫௬)

கன்னம் என்பது, கனம் எனவந்தது இடைக்குறை.

காவா சனனந் துடையான் கமல மலரெனுமங்
காவா சனனந் தினுநந் திடாவுனைக் கண்டுவணங்
காவா சனனந் திகழ்வய லேரக கந்தவந்து
காவா சனனந் தவிர்த்தொழிப் பாயென் கவலையையே.

(இ - ள்.) அனம் திகழ் வயல் ஏரக கந்த - அன்னங்கள் விளங்குகின்ற வயல்களாற் சூழப்பட்ட திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்ற கந்தசுவாமியே!—கா வாசன் - கற்பகச்சோலையில் வாசஞ்செய்கின்ற இந்திரனும்,—நந்து உடையான்-சங்கையுடைய விஷ்ணுமூர்த்தியும்,—மங்கா கமல மலர் எனும் ஆசனன் - (ஒளி) குறையாத தாமரைமலராகிய ஆசனத்தையுடைய பிரமதேவனும்,—நந்தினும் நந்திடா உனை - அழியினும் அழியாத தேவரீரை,—கண்டு வணங்கு ஆவாசன் - தரிசித்து

வணங்கும்படியான எண்ணத்தையுடைய அடியேனை,—வந்து காவா - வந்து காத்தருளுக.—என் சனனம் தவிர்த்துக் கவலையை ஒழிப்பாய் - அடியேனது பிறவியை நீக்கி மனத்துன்பத்தை ஒழித்தருளுக. எ - று. (௫௭)

முதலடியிலுள்ள அன் சாரியை. ஆபாசன் என்பது ஆவாசன் என எதுகைநோக்கி வந்தது. ஆபாசம் - எண்ணம்.

கவலைக் குளமொரு வீடாக்கும் வஞ்சனைக் கன்னியர்மோ
கவலைக் குளகப் படாதருண் மாவலி காய்துயர்மூழ்
கவலைக் குலவடி வங்கொண்ட மான்மரு காநறைதேங்
கவலைக் குளம்புய மாடுறு மேரக தேசிகனே.

(இ - ள்.) மாவலி காய் துயர் மூழ்க வலைக் குள வடிவம் கொண்ட மால் மருகா - மாவலிச்சக்கிரவர்த்தியைக்கோபித்துத் துன்பத்தில் முழுகும்படி சீக்கிரத்தில் வாமனரூபங்கொண்ட விஷ்ணுமூர்த்திக்கு மருகனே!—நறை தேங்க அலைக்குள் அம்புயம் ஆடுறும் ஏரக தேசிகனே - தேனிறைந்த அலைகளையுடைய தடாகத்துக்குள் தாமரைகள் அசைகின்ற திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற குருநாதனே!—கவலைக்கு உளம் ஒரு வீடு ஆக்கும் வஞ்சனை - துன்பத்துக்கு மனதை ஒரு வீடாகச்செய்கின்ற வஞ்சகனாகிய அடியேனை,—கன்னியர் மோக வலைக்குள் அகப்படாது அருள் - பெண்களுடைய மோகமாகிய வலைக்குள் சிக்காதிருக்கும்படி அனுக்கிரகஞ்செய்தருள்க. எ-று.

உள்ளம், வல்லை, குள்ளம் என்பன உளம், வலை, குளம் என இடைக்குறையாகவந்தன.

சிகர வளைகட லுக்குங் குயிற்குந் தியங்கியவஞ்
சிகர வளையுந்தரி யாடியி லுஞ்செ யாள்விசுவா
சிகர வளையுண் டவன்றெழு மேரகத் தேவர்நந்தே
சிகர வளையின் றுவந்தின்ன மும்வந்து சேர்ந்திலரே.

(இ - ள்.) சிகர வளை கடலுக்கும் குயிற்கும் தியங்கிய வஞ்சி - உயர்வாகிய சங்கையுடைய கடலோசைக்கும், குயிலோசைக்கும் மயங்கிய கொடிபோன்ற நம் பெண்ணனைவள்,—கரவளையும் தரியாள் - கைகளில் வளையல்களுந்தரிக்காள்;—துயிலும் செயாள் - நித்திரையுஞ் செய்யாள்;—விசுவாசி - விசுவாசமுடையவள்;—கரவு அளை உண்டவன் தொழும் தேவர் எரகத்து- திருட்டுத்தனமாக (கோகுலப்பெண்களின்வீட்டிலுள்ள)வெண்ணெயையுண்ட விஷ்ணுமூர்த்திவணங்குகின்ற சுவாமிநாதக்கடவுளினது திருவேரகமலையினிடத்துள்ள,—நம் தேசிகர் - நமது அழகுபொருந்திய தலைவர்,—அவளை உவந்து இன்று இன்னமும் வந்து சேர்ந்திலரே - அப்பெண்ணைவிரும்பி இன்று இன்னமும் வந்து சேர்ந்தாரில்லையே. (என்செய்வேன்.) எ - று. [பாங்கி கூற்று.] (ருக)

கடல் குயில் என்பன அவற்றின் ஓசைக்கானது ஆகுபெயர். என்செய்வேன் என்னும் இரக்கச்சொல் எஞ்சிநிற்கின்றது.

இலங்கா திபனை யடுமான் மருக னிமையவர்தம்
இலங்கா திபந்திக ழும்பொழில் சூழ்பொன்னி யேரகத்தில்
இலங்கா திபதந் தொழக்கை யிலம்புகழ் கேட்பதனுக் [கே.
இலங்கா திபமன்ன நெஞ்சேயென் செய்வமின் னல்லலைக்

(இ - ள்.) இபம் அன்ன நெஞ்சே - (மத) யானையையொத்த மனமே!—இலங்காதிபனை அடும் மால் மருகன் - இலங்கைக்கு அரசனாகிய இராவணனைக்கொன்ற விஷ்ணுமூர்த்திக்கு மருகரும்,—இமையவர்தம் இலம் காது இபம் திகழும் பொழில் சூழ் பொன்னி எரகத்தில் இலங்கு ஆதி பதம் - (சுவர்க்கலோகத்திலுள்ள) தேவர்களது மாளிகையிற்போய் முட்டுகின்ற மரக்கொம்புகள் விளங்குகின்ற சோலைகளாலும் காவேரிநதியினு

லுஞ் சூழப்பட்ட திருவேரகமலையில் விளங்குகின்ற முதல்வரு மாகிய சுவாமிநாதக்கடவுளுடைய திருவடிகளை,—தொழக் கை இலம் - அஞ்சலிசெய்யக் கைகளிலம்;—புகழ் கேட்பதனுக்குக் காது இலம் - அவர்கீர்த்தியைக் கேட்பதற்குச் செவிகளிலம்;—அல்லலைக்கு என் செய்வம் - இத்துன்பத்திற்கு என்ன செய்வோம். எ - று. (சுO)

நான்காமடியிலுள்ள இன் சாரியை.

அலைய மருப்புல கேத்தே ரகத்துறை யண்ணல்வந்தான்
அலைய மருப்புக் களிற்றனங் காவெதி ராகவந் தாய்
அலைய மருப்புப் பெறுமோ வினிக்குடை யந்தரத்தே
அலைய மருப்புங் கழுந்தீயு நீயிங் ககல்குவையே.

(இ - ள்.) ஐ மருப்பு அல் களிற்று அனங்கா - அழகிய தந்தங்கள்பொருந்திய இருளாகிய யானைப்படையையுடைய மன்மதனே!—அலை அமர் உப்பு உலகு ஏத்து ஏரகத்து உறை அண்ணல் வந்தான் - அலைகள்பொருந்திய கடலாற் சூழப்பட்ட உலகத்தாரால் றுதிக்கப்படுகின்ற திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்ற தலைவன் வந்துவிட்டான்,—எதிராக வந்தாய் - (நீ இப்பொழுது எனக்கு) எதிரியாகவந்தாய்,—அலை அமர் உப்புப் பெறுமோ - வருத்துகின்ற (உன்னுடைய) யுத்தமானது உப்பளவேனும் பிரயோசனப்படுமோ?—இனிக் குடை அந்தரத்தே அலைய - இனி (உன்னுடைய) குடையாகிய சந்திரன் ஆகாயத்தே அலையக்கடவன்,—மருப் புங்கழும் தீயும் - வாசனைபொருந்திய புட்பபாணமுங் கருகிப்போகும்,—நீ இங்கு அகல்வை - நீ இவ்விடத்தைவிட்டு நீங்கக்கடவாய். எ - று. [தலைவி மன்மதனைக்கோபித்தல்.] (சுக)

இரண்டாமடியிலுள்ள அ சாரியை.

அகல வியாகம் பலசெய்து மென்கடம் பாரலங்கல்
அகல வியாதனைப் போற்கலை கற்றெ னரும்பிறவி
அகல வியாதி வாராம னல்லேரகத் தன்பர்நெஞ்சாம்
அகல வியாவிளக் காநின் கழல்பணி யாதவரே.

(இ - ள்.) கடம்பு ஆர் அலங்கல் அகல - கடப்பமலராற் றொடுக்கப்பட்ட மாலையையணிந்த மார்பையுடையவனே!—அரும்பிறவி அகல - அருமையாகிய பிறவி நீங்குதற்பொருட்டும்,—வியாதி வாராமல் - (மல) நோய் வாராதிருத்தற்பொருட்டும்,—நல் ஏரகத்து அன்பர் நெஞ்சம் ஆம் அகல் - நல்ல திருவேரகமலையின்கணுள்ள அடியார்களது மனமாகிய தகழியினிடத்திலுள்ள,—அவியா விளக்கு ஆம் நின் கழல் பணியாதவர் - அணையாத தீபமாகிய தேவரீரது திருவடிகளை வணங்காதவர்,—அகல அவி பல யாகம் செய்தும் என் - விரிந்த (நெய்முதலிய) அவிகளைச் சொரிந்து பலயாகங்களைசெய்தலினாலும் என்னபலன்,—வியாதனைப் போல் கலை கற்று என் - வியாசமுனிவரைப்போலப்(பல)சாஸ்திரங்களைக்கற்றதினாலும் என்னபலன்.

தவந்தனை வேண்டு கிலேனொரு நாளுந் தனிச்செந்திற்கந்
தவந்தனை யுநினக் குச்செய்கி லேன்பவந் தானெனும்பா
தவந்தனை யெவ்வண்ணம் யான்கடப் பேனற் சதுமறைநா
தவந்தனை போலெனை யாடிரு வேரகத் தற்பரனே.

(இ - ள்.) தனிச் செந்தில் கந்த - ஒப்பற்ற திருச்செந்தூரிலெழுந்தருளியிருக்கின்ற கந்தசுவாமியே!—நல் சது மறை நாத - நல்ல நான்குவேதங்களுக்குந் தலைவனே!—திரு ஏரகத் தற்பரனே - திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற ஆத்ம நாயகனே!—ஒரு நாளும் தவம் தனை வேண்டுகிலேன் - (அடியேன்) ஒருநாளுந் தவஞ்செய்தலை விரும்பினேனில்லை;—நினக்கு வந்தனையும் செய்கிலேன் - தேவரீருக்கு வழிபாடுஞ் செய்

தேனில்லை;—பவம் தான் எனும் பாதவம் தனை எவ்வண்ணம் யான் கடப்பேன் - பிறவியைத் தருகின்ற தான் என்னும் (அகங்காரமாகிய) காட்டை எவ்விதம் அடியேன் கடப்பேன்;— அனைபோல் வந்து எனை ஆள் - (ஆதலின்) தாய்போல்வந்து அடியேனை ஆண்டருளும். எ - று. (சரு)

அன்னை என்பது அனை என வந்தது இடைக்குறை.

பாரவச் சிரப்படை யான்றொழு மேரகப் பண்ணவவன்
பாரவச் சிரத்தையில் வாராத தேவ பழிப்பில்சந்தம்
பாரவச் சிரதி பதியென்று லோபரைப் பாடிநித்தம்
பாரவச் சிரங்கை படைத்தேனை யோவென்ன பாதகமே.

(இ - ள்.) பர - மேலானவரே!—வச்சிரப் படையான் தொழும் ஏரகப் பண்ணவ - வச்சிராயுதத்தையுடைய இந்திரன் வணங்குகின்ற திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற கடவுளே!—வன்பர் அவச் சிரத்தையில் வாராத தேவ - அன்பில்லாதவர்களது வீண்விசுவாசத்துக்கு வாராத தேவனே!—பழிப்பு இல் சந்தம் பரவு அச்சு இரதி பதி என்று - பழிக்கப்படாத அழகானது விரியப்பெற்ற சரீரத்தையுடைய இரதிதேவிக்கு நாயகனாகிய மன்மதனே என்று,—உலோபரைப் பாடி - உலுத்தர்களைப்பாடி,—நித்தம் பரவச் சிரம் கை படைத்தேன் - நாள்தோறும் வணங்கச் சிரசையுங் கைகளையும் பெற்றேன்;— ஐயோ என்ன பாதகம் - ஐயோ! இதென்னபாவம்! எ - று. ()

தகர வரிக்குழ லாய்ச்சியர் தங்கலை தன்னையொளித்
தகர வரிக்கு மருகா வசுரன் சைலம்பிளந்
தகர வரிக்குலஞ் சூழே ரகாதணித் தாள்வெவ்விடந்
தகர வரிக்கு மதியால் வருந்திவ டாகத்தையே.

(இ - ள்.) தகர அரிக் குழல் ஆய்ச்சியர் தம் கலை தன்னை ஒளித்த கரவு அரிக்கு மருகா - மயிர்ச்சாந்தையணிந்த வண்டு

கள் மொய்க்கின்ற கூந்தலையுடைய இடைச்சியர்களது வஸ்திரத்தை மறைத்த வஞ்சகத்தையுடைய விஷ்ணுமூர்த்திக்கு மருகனே!—அசுரன் சைலம் பிளந்த கர - தாரகாசுரனையும் கிரவுஞ்ச கிரியையும் (வேலாயுதத்தினாற்பிளந்த) திருக்கரத்தையுடையவனே!—அரிக் குலம் சூழ் ஏரகா - வண்டுக்கூட்டங்கள் சூழ்கின்ற திருவேரகத்தையுடையவனே!—இவள் - இப்பெண்ணினுடைய,—வெவ் விடம் தரு அரவு அரிக்கும் மதியால் வருந்து தாகத்தை தணித்து ஆள் - கொடியவிடம்பொருந்திய (இராகு) என்னும் பாம்பினால் அரிக்கப்பட்ட சந்திரனால் வருந்துகின்ற (காம) விடாயை நீக்கி அனுக்கிரகஞ்செய்தருளுக. ( )

கத்தான கத்த வனந்தீர்க்கு மான்மரு கன்வள்ளிமோ
கத்தான கத்தன் றியாகந் தரநற் கடிமனைய
கத்தான கத்தொலி மல்கே ரகன்சுரர் கைதொழும
கத்தான கத்தன் றிருவடி யேமுத்தி காத்தவர்க்கே.

(இ - ள்.) கத்து ஆன் அகத் தவனம் தீர்க்கும் மால் மருகன் - கதறுகின்ற பசுவினிடத்துள்ள தாகத்தை நீக்கிய விஷ்ணுமூர்த்தியின் மருகனும்,—வள்ளி மோகத்தான் - வள்ளிநாயகியிடத்தில் விருப்பத்தையுடையவனும்,—அகத்தன் - (அடியார்களது) இருதயத்தில் வசிப்பவனும்,—தியாகம் தர நல் கடிமனை அகத்து ஆனகத்து ஒலி மல்கு ஏரகன் - வேண்டியவற்றைத் தரத்தக்க நல்ல காவலையுடைய வீடுகளிடத்தில் துந்துபி வாத்திய ஒலி நிறைந்த திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்றவனும்,—சுரர் கை தொழும் மகத்தான கத்தன் - தேவர்கள் கைகுவித்து வணங்கத்தக்க மகத்துவமுடைய கர்த்தனுமாகிய சுவாமிநாதக்கடவுளிடத்தே,—காத்தவர்க்கு - காத்துக்கொண்டிருந்தவர்களுக்கு,—திருவடியே முத்தி - திருவடியே மோக்ஷம். எ - று. (௬௬)

தவா வாவரை யன்றேவர் வாசவன் சந்திரனு
தவா வரவரை மேவ வசுரர் சமரிடைமுந்
தவா வரவரைப் போதி லறுத்தரு டன்னையளித்
தவா வரவரை மன்னே ரகற்குச் சமானமின்றே.

(இ - ள்.) தவர் அ அரவர் அயன் தேவர் வாசவன் சந்திரன் ஆதவர் அவர் அவரை மேவ - முனிவர்களும் அந்த சேஷ சயனத்தையுடைய விஷ்ணுமூர்த்தியும், பிரமதேவனும், தேவர்களும், இந்திரனும், சந்திரனும், (பன்னிரண்டு) சூரியர்களும், ஆகிய அவர்கள் அம்முருகக்கடவுளை யடைந்து(பிரார்த்திக்க),— அசுரர் சமரிடை முந்த வரவர அரைப்போதில் அறுத்து - அசுரர்கள் யுத்தத்தில் முற்பட்டு வரவர அரைக்ஷணப்போதில் அறுத்து,—அருள் தன்னை அளித்தவர் அவர்-(அத்தேவர்களுக்குக்)கிருபைசெய்தவர்அவர்;—(ஆகையால்),—ஏரகற்குச் சமானம் இன்று- திருவேரகமலையிலெழுந்தருளியிருக்குஞ் சுவாமிநாதக்கடவுளுக்குச் சமானமான தெய்வமில்லை. (ஆதலின்)—அ வரை மன் - அத்திருவேரகமலையிற்போய்ப் பொருந்தியிருங்கள்.எ-று. (சுஎ)

மான வராக மருப்பான் மைந்தர் வரிக்குயிலை
மான வராக மொழிபேசும் வள்ளி மனத்துக்கின்ப
மான வராக வினோரக வென்பார்க் குவந்தருள்கோ
மான வராக மணத்தா ரொழிக்கு மயற்கடலே.

(இ - ள்.) மான வராக மருப்பு அரன் மைந்தர் - பெருமைபொருந்திய (விஷ்ணுமூர்த்தியாகிய) பன்றியினது கொம்பையணிந்த சிவபெருமானுடைய குமாரரும்,—வரிக் குயிலை மான அராக மொழி பேசும் வள்ளி மனத்துக்கு இன்ப மானவர் - வரிபொருந்திய குயிலோசையையொத்த இனியசொற்களைச் சொல்லுகின்ற வள்ளிநாயகி மனத்துக்கு இன்பமானவரும்,—ஆ கவின் ஏரக என்பார்க்கு உவந்து அருள் கோமான் - பசுக்களையுடைய அழகிய திருவேரகமலையை யுடையவரே

என்று துதிப்பவர்களுக்கு மகிழ்ந்து திருவருள்செய்கின்ற தலைவருமாகிய,—அவர் - அச்சுவாமிநாதக்கடவுளினது,—ஆக மணத்தார் மயல் கடல் ஒழிக்கும் - திருமார்பிலணிந்திருக்கின்ற வாசனைபொருந்திய மாலையானது (காம) மயக்கமாகிய கடலை ஒழித்துவிடும். எ - று. [தலைவி கூற்று.] (௬அ)

கடகர டக்குஞ் சரமங்கை பங்க கதிரயில்வி
கடகர டக்குலம் போற்றமர் சுற்றவக் காலன்செய்நோய்
கடகர டக்குன்று போன்மகத் தோன்றிக் கதித்துமுன்றி
கடகர டக்குந் திருவே ரகாகன காசலனே.

(இ - ள்.) கட கரட குஞ்சர மங்கை பங்க - மதஞ்சொரிகின்ற கதுப்பையுடைய ஐராவதம் என்னும் யானையினால் வளர்க்கப்பட்ட தெய்வயானையம்மையைப் பாகத்திலுடையவரே!—கதிர் அயில் விகட கர - ஒளிபொருந்திய வேலாயுதத்தைத்தரித்த அழகிய திருக்கரத்தையுடையவரே!—அடு அக் குன்று போல் மகம் தோன்றி கதித்து முன் திகழ் தகர் அடக்கும் திரு ஏரகா - கொல்லும்படி அந்த மலைபோல(நாரதமுனிவருடைய) யாகத்திற் றோன்றி யெழுந்து முன்னே விளங்கிய ஆட்டுக்கடாவை அடக்கி, திருவேரகமலையில் எழுந்தருளியிருக்கின்றவரே!—கனக அசலனே - பொன்மயமாகிய மலைகள்தோறும் வசிப்பவரே!—டக்கு உலம் போல் தமர் சுற்ற அக்காலன் செய் நோய்கள் தகர் - முரட்டுத்தனத்தையுடைய திரண்ட கல்லையொத்த (புயத்தையுடைய) எமபடாள் சூழும்படி அந்த இயமன்வந்து செய்கின்ற துன்பங்களை நீக்கியருளுக. எ - று. (௬௯)

இடக்கு என்பது டக்கு என வந்தது முதற்குறை.

கனகா சலம்ப விளந்தேமல் பூத்துக்கச் சுக்கடங்காக்
கனகா சலமுலை யாளொனும் வள்ளி கருத்துறைமோ
கனகா சலகலச் செய்யே ரகமுரு காபன்னிரு
கனகா சலனப் பவந்தீர நல்குநின் காலெனக்கே.

(இ - ள்.) கன காசு அலம்ப இளம் தேமல் பூத்துக் கச்சுக்கு அடங்கா கனக அசல முலையாள் எனும் வள்ளி கருத்து உறை மோகன் - பருத்த இரத்தினுபாரணங்கள் ஒலிக்கின்ற இளமைபொருந்திய தேமல்படரப்பெற்றுக் கச்சுக்குள்ளடங்காத பொன்மயமாகிய தனங்களையுடையவளென்று சொல்லப்பட்ட வள்ளிநாயகியின் மனத்தில் வசிக்கின்ற மோகத்தையுடையவனே!—காசு அல் அகலச் செய் ஏரக முருகா - பொற்பிரகாசத்தினுல் இருட்டை நீங்கச் செய்கின்ற திருவேரகமலையில் எழுந்தருளியிருக்கின்ற இளமைப்பருவத்தை யுடையவனே!—பன்னிரு கனகா சலன - பன்னிரண்டு (புயங்களாகிய) பொன்மலைகளை யுடையவனே!—பவம் தீர நின் கால் எனக்கு நல்கு - பிறவி நீங்கத் தேவரீருடைய திருவடிகளைத் தமியேனுக்குக் கொடுத்தருளுக. எ - று. (எ0)

மூன்ருவது அடியிலுள்ள அ சாரியை.

காலா யுதங்க லென்னென்று வெங்கூற்றங் கடுகுமுன்னே
காலா யுதமு மயிலு மயிலுங்கண் டாலுய்குவேன்
காலா யுதகமண் விண்ணங்கி யாகிய கந்ததண்டைக்
காலா யுததி யுலகேத்து மேரகங் காண்கையுற்றே.

(இ - ள்.) கால் ஆய் உதகம் மண் விண் அங்கி ஆகிய கந்த - வாயுவும் ஆராயத்தக்க அப்பும் பிருதிவும் ஆகாயமும் அக்கினியும் ஆகிய பஞ்சபூத சொரூபராகிய கந்தசுவாமியே!—தண்டைக் காலா - தண்டையை அணிந்த திருவடிகளையுடையவனே!—உததி உலகு ஏத்தும் ஏரகம் காண்கை உற்று - கடலாற்சூழப்பட்ட உலகத்தார்கள் துதிக்கின்ற திருவேரகத்தைத் தரிசிக்கப்பெற்று,—ஆயு தங்கல் என் என்று வெம் கூற்றம் கடுகும் கால் முன்னே - ஆயுள்முடிவு தாமசப்படுதல் என்னகாரணம் என்று கொடிய இயமன் (அடியேனைப்பிடிக்கச்) சமீ

பித்துவருங்காலத்துக்குமுன்னே,—காலாயுதமும் மயிலும் அயிலும் கண்டால் உய்கு வேன் - (தேவரீரது) கொடியாகிய சேவலையும் வாகனமாகிய மயிலையும் ஆயுதமாகிய வேலாயுதத்தையுங் கண்டாற்பிழைப்பேன். எ - று. (எக)

கயவா னனத்த னக்கிளை யாய்வள்ளி காந்தமுரு
கயவா னனத்தரி தன்மரு காவயிற் கையதெய்வக்
கயவா னனத்த மடையாமற் காத்தருள் கந்தநற்பங்
கயவா னனத்தடஞ் சூழே ரகத்துக் கதிபதியே.

(இ - ள்.) கய ஆனனத்தன் தனக்கு இளையாய் - யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளுக்குத் தம்பியே!—வள்ளி காந்த - வள்ளிநாயகிக்கு நாயகனே!—முருகய - இளமைப்பருவத்தையுடையவனே!—வால் நல் நந்து அரி தன் மருகா - வெள்ளிய நல்ல சங்கைத்தரித்த விஷ்ணுமூர்த்தியின் மருகனே!—அயில் கைய - வேலாயுதம்பொருந்திய திருக்கரத்தையுடையவனே!—கந்த - கந்தசுவாமியே!—நல் பங்கய வான் அனத் தடம் சூழ் ஏரகத்துக்கு அதிபதியே - நல்ல தாமரைமலர்களிடத்துப் பெரிய அன்னங்கள்வசிக்கின்ற தடாகங்களாற் சூழப்பட்ட திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே!—தெய்வக் கய வான் அனத்தம் அடையாமல் காத்தருள் - தேவர்கள் வசிக்கின்ற மென்மையாகிய சுவர்க்கலோகம் அழிவையடையாமல் காத்தருளுக. எ - று. (எஉ)

முருகைய என்பது எதுகைநோக்கி முருகய எனப்போலியாக வந்தது. அன்னம் என்பது, அனமென வந்தது இடைக்குறை.

கதிகா விரிகங்கை யாடிவந் தாலுண்டு காதல்செல்லுங்
கதிகா விரிமைப் பொழுதும் விடீர்நுங் கபடத்துற்சங்
கதிகா விரிய வினையாவு நீங்கிக் களிப்பவெய்துங்
கதிகா விரிதிரு வேரக வென்றொரு காற்சொலவே.

(இ - ள்.) நும் கபடத் தூற் சங்கதி இமைப்பொழுதும் விடீர் - உங்களுடைய வஞ்சகமாகிய துர்விஷயத்தை க்ஷணப் பொழுதும் விடாதவர்களே!—கா வினை யாவும் நீங்கி இரிய காதல் செல்லும் கதி காவிர் - வலிய வினைகளெல்லா நீங்கி முறிந்தோடும்படி ஆசையானது செல்லுகின்ற வேகத்தைத் தடுக்காதவர்களே!—கா விரி திரு ஏரக என்று ஒருகால் சொல- சோலைகள் விரியப்பெற்ற திருவேரகமலையிலெழுந்தருளியிருக் கின்ற சுவாமிநாதக்கடவுளே என்று ஒருமுறை துதிக்க,— காவிரி கங்கை ஆடி வந்தால் கதி உண்டு - கவிரிநதியிலும் கங் காநதியிலும் ஸ்நானஞ்செய்தலினாலுண்டாகும் பலன் உண்டு;— களிப்ப கதி எய்தும் - (அதுவன்றி) நீங்கள் சந்தோஷிக்கும்படி மோக்ஷமும் கிடைக்கும். எ - று. (எஉ)

வேதாக மஞ்சுகஞ் சொல்லே ரகவடி வேலவுய்க
வேதாக மஞ்சுமொன் றும்படைத் தோய்வரம் வெப்பெழும்ப
வேதாக மஞ்கம் படிசாந் தினையப்பு வார்கள்விஞ்ச
வேதாக மஞ்சள கத்தார்கைத் தேனிட்ட மேற்பணியே.

(இ - ள்.) சுகம் வேதாகமம் சொல் ஏரக - கிளிகள் வேதா கமங்களை அத்தியயனம் பண்ணுகின்ற திருவேரகமலையிலெழு ந்தருளி யிருக்கின்றவரே!—வடி வேல - கூர்மைபொருந்திய வேலாயுதத்தையுடையவரே!—கம் அஞ்சும் ஒன்றும் படைத் தோய் - ஆறு திருமுடியையுடையவரே!—வெப்பு எழும்ப தாகம் அஞ்சும்படி மஞ்சு அளகத்தார் சாந்தினை அப்புவார்கள் - காமவெப்பம் எழுந்து அதிகரிக்க, அதனல் காமவிடாய் உண் டாய் பயப்படும்படிச்செய்ய மேகம்போன்ற கூந்தலையுடைய பெண்கள் சந்தனத்தைப் பூசுவார்கள்;—தாகம் விஞ்ச இட்டம் கைத்தேன் - காமவிடாய் அதிகரித்தலினலே அப்பெண்களின் மேல் வைத்த இஷ்டத்தை வெறுத்துவிட்டேன்;—மேல் -

இனிமேல்,—உய்க வரம் பணி தா - (அடியேன்) பிழைக்கும் படியான வரத்தையும் பணிவிடையையுங் கொடுத்தருளும். ( )

ஏகாரம் மூன்றும் அசைகள்.

பணியக் கரமரர் மாலயன் வந்து பரவிநிதம்
பணியக் கரவுறு சூர்வென்ற வேரகப் பண்ணவநற்
பணியக் கரவணிந் தோன்பால நின்புகழ் பாடுதற்கே
பணியக் கரமிரு மூன்றோயென் னுட்க படமறவே.

(இ - ள்.) பண் இயக்கர் அமரர் மால் அயன் வந்து நிதம் பணிய - இராகத்தைப்பாடுகின்ற இயக்கர்களும், தேவர்களும், விஷ்ணுமூர்த்தியும், பிரமதேவரும் வந்து நாடோறுந்(தங்குறைகளைச்சொல்லி)வணங்க,—கரவு உறு சூர் வென்ற ஏரகப் பண்ணவ - வஞ்சகத்தன்மைபொருந்திய சூரபத்மனைக் கொன்ற திருவேரகமலையி லெழுந்தருளி யிருக்கின்ற தேவனே!—நல் பணி அக்கு அரவு அணிந்தோன் பால - நல்ல ஆபரணமாக எலும்மையும் சர்ப்பத்தையுந் தரித்தருளிய சிவபெருமானது புத்திரனே!—அக்கரம் இருமூன்றோய்-சடாக்ஷரசொரூபனே!—நின் புகழ் பாடுதற்கு என் உள் கபடம் அறப்பணி - தேவரீரது புகழையெடுத்துத் துதித்தற்கும் அடியேனது மனதிலுள்ள வஞ்சகம் நீங்குதற்கும் கிருபைசெய்தருள்க. எ - று. (எரு)

படவர வந்தி மதிபுனை வார்தரு பாலருக்காட்
படவர வந்தினஞ் சேரா தருள்வர் பணிமயற்க
படவர வந்திகழ் மாத ரிடைப்படி யாதுநன்றேய்
படவர வந்தியர் சூழே ரகத்தையன் பாலுளமே.

(இ - ள்.) உளமே - மனமே!—பட அரவு அந்தி மதி புனைவார் தரு பாலருக்கு ஆட்படு - படம்பொருந்திய சர்ப்பத்தையும் மாலைக்காலத்திற் றோன்றுகின்ற சந்திரனையுந் தரித்தருளிய சிவபெருமான் பெற்றருளிய குமாரக்கடவுளுக்கு அடி

மைப்படு;—அவர் அவம் தினம் சேராது அருள்வர் - அக்கட வுள் பாவந் தினந்தோறும் அடையாமல் கிருபைசெய்தருளுவர். (ஆதலின்,)—மயல் கபடம் அரவம் திகழ் மாதர் இடைப் படி யாது - காமமயக்கமும் வஞ்சகமும் ஆரவாரமும் விளங்காநின்ற பெண்களினிடத்துப் (புத்தி) அழுந்தாமல்,—நல் நோய் பட - நல்ல (ஜனன மரண) நோய் நீங்க,—வா வந்தியர் சூழ் ஏரகத்து ஐயன் பால் பணி - மேலாகிய மங்கலப்பாடகர்கள் சூழ்ந்திருக் கின்ற திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்ற நமது ஐயனா கிய சுவாமிநாதக்கடவுளிடத்துப் போய் வணங்கு. எ - று. (எசு)

பாலிக் குமரிய சொல்லென் றவர்கைப் படாதெற்கருள்
பாலிக் குமரி மருகா வயற்கும் பரந்தொளிர்க
பாலிக் குமரிய ஞானஞ்சொல் வோய்தண் பழனங்களின்
பாலிக் குமரியுஞ் சூழே ரகாமலர்ப் பாதத்தனே.

(இ - ள்.) பாலிக்கும் அரி மருகா - இரக்ஷிக்குந் தொழி லைச் செய்கின்ற விஷ்ணுமூர்த்திக்கு மருகனே!—அயற்கும் பரந்து ஒளிர் கபாலிக்கும் அரிய ஞானம் சொல்வோய் - பிரம தேவனுக்கும் விரிந்து விளங்காநின்ற பிரமகபாலத்தைத் தரித் தருளிய சிவபெருமானுக்கும் அருமையாகிய ஞானத்தையுபதே சித்தவனே!—தண் பழனங்களின் பால் இக்கும் அரியும் சூழ் ஏரகா-குளிர்ச்சிபொருந்திய வயல்களினிடத்துள்ள கரும்புகளும் நெற்கதிர்களுஞ் சூழ்கின்ற திருவேரகமலையிலெழுந்தருளியிருக் கின்றவனே!—மலர்ப் பாதத்தனே - செந்தாமரைமலர்போன்ற திருவடிகளையுடையவனே!—பால் இக்கும் அரிய சொல் என் றவர் கைப்படாது எற்கு அருள் - பாலினுந் தேனினும் அரு மையாகிய சொல்லையுடையவரென்று சொல்லப்பட்ட பெண்க ளின் வசப்படாதிருக்கும்படி அடியேனுக்கு அனுக்கிரகஞ் செய்தருளுக. எ - று. (எஎ)

தத்துவந் தானந் தவமோர் கிலங்கதிர்ச் சத்தியையத்
தத்துவந் தானந் திருவே ரகந்தொழச் சார்கிலம்ம
தத்துவந் தானந் தருமா நிகர்நெஞ்ச மேயினிச்சாந்
தத்துவந் தானந் திடாவகை யுன்னலந் தாரணிக்கே.

(இ - ள்.) மதத்துவம் தானம் தரு மா நிகர் நெஞ்சமே - கொழுப்பையும் மதஜலத்தையுமுடைய யானையை யொத்த மனமே!—தாரணிக்கு - பூமியினிடத்தே,—தத்துவம் தானம் தவம் ஓர்கிலம் - தத்துவங்களையுந் தானங்களையுந் தவங்களையு மறிந்தோமில்லை;—கதிர்ச் சத்தியை அத்தத்து உவந்தான் அம் திரு எரகம் தொழச் சார்கிலம் - ஒளிபொருந்தி ஞானசத்தியாகிய வேலாயுதத்தைத் திருக்கரத்தில் மகிழ்ந்து தரித்தருளிய சுவாமிநாதக்கடவுளினது அழகிய திருவேரகமலையை வணங்கும்படி அடைந்தோமில்லை;—இனிச் சாந்தத்துவம் நந்திடா வகை உன்னலம் - இனிச் சாந்தகுணம் கெடாதிருக்கும்படி தியானித்தோமில்லை. எ - று. தான் அசை. (எஅ)

தாரா தனத்துக் கவலையை நாளுந் தவஞ்செயின்பத்
தாரா தனத்துக் கருகாக் குவையெனைத் தண்கடப்பந்
தாரா தனத்துவர் வாய்வள்ளி பங்க சதுமறைக்கா
தாரா தனத்துய ரேரக சூர சமரத்தனே.

(இ - ள்.) தண் கடப்பம் தாரா - குளிர்ச்சிபொருந்திய கடப்பம்பூமாலையைத் தரித்தவனே!—தனத் துவர் வாய் வள்ளி பங்க - தனங்களையும் பவளம்போன்ற வாயையுமுடைய வள்ளி நாயகியைப் பாகத்திலுடையவனே!—சது மறைக்கு ஆதாரா - நான்கு வேதங்களுக்கும் ஆதாரமானவனே!—தனத்து உயர் எரக - செல்வத்தினுலுயர்ந்த திருவேரகமலையையுடையவனே!—சூர சமரத்தனே - சூரபத்மனைக்கொன்ற வலிமையையுடையவனே!—நாளும் அனத்துக் கவலை தாராது - நாள்தோறும் (அடி

யேனுக்கு) அன்னக்கவலையைத் தாராமல்,—எனைத் தவஞ்செய் இன்பத்தார் ஆதனத்துக்கு அருகு ஆக்குவை - அடியேனைத் தவஞ்செய்தலையே இன்பமாகவுடைய முனிவர்களது பீடத்துக்குச் சமீபமாக இருக்கும்படி செய்தருளுக. எ - று. (எக)

அன்னத்துக்கு என்பது அனத்துக்கு என வந்தது இடைக்குறை.

சமனம ராடவ ரும்போ துன்றண்டைச் சரணமென்வஞ்
சமனம ராவணி யான்பால வுன்னத் தனிவரந்தா
சமனம ராபதி யென்றோங்கு மேரகந் தான்வளர்வா
சமனம ராமர மட்டோன் மருகநிற் சார்ந்தனனே.

(இ - ள்.) அரா அணியான் பால - சர்ப்பாபரணத்தையுடைய சிவபெருமானது குமாரனே!—அமராபதி சமன் என்று ஓங்கும் ஏரகம் வளர் வாச - தேவலோகத்துக்குச் சமமென்று சொல்லும்படியாக உயர்ந்திருக்கின்ற திருவேரகமலையிலெழுந்தருளி வசிப்பவனே!—மன் அம் மராமரம் அட்டோன் மருக - நிலைபெற்ற அழகிய மராமரத்தை அழித்தருளிய மகாவிஷ்ணுமூர்த்தியின் மருகனே!—நின் சார்ந்தனன் - தேவரீரைச் (சரணாக) அடைந்தேன்;—சமன் அமர் ஆட வரும் போது - இயமன் (அடியேனிடத்தில்) யுத்தஞ் செய்யவருங்காலத்தில்,—உன் தண்டைச் சரணம் என் வஞ்ச மனம் உன்ன - தேவரீரது பாதச்சிலம்பையணிந்த திருவடிகளை அடியேனது வஞ்சகம் பொருந்திய மனமானது தியானிக்கும்படி,—தனி வரம் தா - ஒப்பற்ற வரத்தைக் கொடுத்தருளுக. எ - று. (அ0)

தனம்பூசிக் காளன்ன மூண்ணுண் மின்னுட்குத் தணிவிலுள்ளி
தனம்பூசிக் காற்றிக் குழன்முடி யாள்வெஞ் சமர்புரிம
தனம்பூசிக் குங்கடி தாய்மெய் யிற்றைக்கத் தளர்ந்துநற்சந்
தனம்பூசிக் காடிரு வேரக நின்னடி தந்தருளே.

(இ - ள்.) திரு ஏரக - திருவேரகமலையிலுள்ள சுவாமிநாதனே!—மின்னாட்கு - மின்னலையொத்த நம் பெண்ணுக்கு,— வெம் சமர் புரி மதன் அம்பு ஊசிக்கும் கடிதாய் மெய்யில் தைக்க - கொடிய யுத்தத்தைச்செய்கின்ற மன்மதனுடைய பாணமானது ஊசியைப்பார்க்கினுங் கொடிதாய்ச் சரீரத்தில் தைக்க,—தணிவு இல் உள் விதனம் தளர்ந்து - நீங்குதலில்லாத மனவிசனத்தாற் றளர்ச்சியடைந்து,—தனம் பூசிக்காள் - திரவியத்தைப் பொருட்டாக எண்ணிக் காப்பாற்றாள்;—அன்னம் உண்ணாள் - போசனஞ் செய்யாள்;—குழல் சிக்கு ஆற்றிப் பூ முடியாள் - கூந்தலின்சிக்கையறுத்துப் பூக்களையுமுடியாள்;— நல் சந்தனம் பூசிக்காள் - நல்ல சந்தனத்தையும் பூசிக்கொள்ளமாட்டாள்;(ஆதலின்,)—நின் அடி தந்து அருள் - தேவரீரது திருவடியைக் கொடுத்து இரக்ஷித்தருளும்.எ-று.[தோழிகூற்று.]

தந்தந் தனம்பந்து முல்லை வதனஞ் சலசமிடை
தந்தந் தனந்தனி மெய்யாகும் வள்ளி தலைவநின்ப
தந்தந் தனந்தங் கவியுனக் கேசொலத் தண்ணளிகள்
தந்தந் தனந்த மெனும்பொழி லேரக தாதவமே.

(இ - ள்.) தந்தம் முல்லை - பற்கள் முல்லையரும்புபோலவும்,—தனம் பந்து - முலைகள் பந்துபோலவும்,—வதனம் சலசம் - முகம் தாமரைமலர்போலவும்,—இடை தந்து - இடை நூல்போலவும்,—தனி மெய் அம் தனம் - ஒப்பற்ற சரீரம் அழகிய பொன்போலவும்,—ஆகும் வள்ளி தலைவ - ஆகின்ற வள்ளிநாயகிக்குத்தலைவனே,—தண் அளிகள் தந்தம் தனந்தம் எனும் பொழில் ஏரக - குளிர்ச்சிபொருந்திய வண்டுகள் தந்தம் தனந்தம் என்று பாடுகின்ற சோலைகளாற் சூழப்பட்ட திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கிற சுவாமிநாதக்கடவுளே!—நின் பதம் தந்து - தேவரீரது திருவடிகளை (அடியேனுக்குக்) கொ

டுத்து,—அம் அனந்தம் கவி உனக்கே சொல - அழகிய அளவில்லாத கவிகளைத் தேவரீருக்கே பாட,—தவம் தா - கல்வியைக்கொடுத்தருளுக. எ - று. (அஉ)

தவம் என்பது புண்ணியத்தோற்றம் நான்கனுளொன்று அதாவது கல்வி.

தவனந் தருங்கணை வேளெய்தி னன்வருஞ் சந்திரனா
தவனந் தருங்குயி லோசையென் றேங்கித் தளர்ந்துசிறந்
தவனந் தருண முலையா ளருந்தில டண்மலர்நந்
தவனந் தருமிக வோங்கே ரகம்வளர் சண்முகனே.

(இ - ள்.) தண் மலர் நந்தவனம் தரு மிக ஓங்கு ஏரகம் வளர் சண்முகனே - குளர்ச்சிபொருந்திய பூக்களையுடைய நந்தனவனங்களும், விருக்ஷங்களும் மிக ஓங்கிவளருகின்ற திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்ற ஆறு திருமுகங்களையுடையவனே!—தருண முலையாள் - பக்குவகாலமாகிய மங்கைப்பருவத்தையுடைய நம் பெண்ணானவள்,—வேள் எய்தினன் - மன்மதன்வந்துவிட்டான்;—கணை தவனம் தரும் - அவனுடைய பாணங்கள் காமவிடாவைத்தரும்;—சந்திரன் ஆதவன் - சந்திரன் சூரியனாகவும்,—அரும் குயில் ஓசை நந்து வரும் என்று ஏங்கித் தளர்ந்து - அருமையாகிய குயிலோசை கேடாகவும் வரும் என்று ஏக்கமுற்று மனத்தளர்ச்சியடைந்து,—சிறந்தவனம் அருந்திலள் - நல்ல ஜலமுங்குடித்திலள். எ - று. [தோழி கூற்று.] (அங)

முகமனந் தங்கஞ்ச மென்றோறு தும் வள்ளிதன் மோகமுன்னான்
முகமனந் தங்கையிற் கொண்டோ னமரர் மொழியவர
முகமனந் தங்கு சினங்காட்டு சூரன்றன் மொய்மணிவிம்
முகமனந் தந்துகள் செய்யே ரகபொன் முடிக்கந்தனே.

(இ - ள்.) முகம் அனந்தம் கஞ்சம் என்று ஓதும் வள்ளி தன் மோக - முகமானது பொன்மயமாகிய தாமரைமலர் என்று சொல்லும்படியான வள்ளிநாயகியினிடத்தில் ஆசையுடையவனே!—நான்முக மன் நந்து அம் கையில் கொண்டோன் அமரர் மொழிய - நான்கு முகங்களையுடைய பிரமதேவனும் சங்கை அழகிய கையிற்றரித்த விஷ்ணுமூர்த்தியும் தேவர்களும் தங்குறைகளைச்சொல்ல,—மனம் தங்கு சினம் காட்டு சூரன் தன் வரம் உக - மனதிற்பொருந்திய கோபத்தை வெளிப்படுத்துகின்ற சூரபத்மனுடைய வரமானது கெட,—விம்மு மொய் மணி கம் அனந்தம் துகள் செய் ஏரக - பருத்த நெருங்கிய இரத்தினங்கள் பதிக்கப்பட்ட முடியை அணிந்த சிரசு அளவில்லாத துண்டமாகும்படி செய்தருளிய திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்றவனே!—பொன் முடி கந்தனே - பொன்னாற்செய்தமுடியையணிந்த கந்தசுவாமியே! என்று,—முன் - (மனமே) தியானி. எ - று. (அச)

மணி என்றது - மணிமுடிக்கானது ஆகுபெயர்.

கந்தனந் தாதிய வாளேந்து மான்மரு கன்குழன்மே
கந்தனந் தாதில குங்கஞ்ச மாம்வள்ளி காந்தன்விளங்
கந்தனந் தாதிவ் வுலகரு ளேரகக் காங்கெயனங்
கந்தனந் தாதி படித்தார்க் கிலேச்சங் கடவினையே.

(இ - ள்.) கந்து நந்து வாள் ஆதிய ஏந்தும் மால் மருகன் - துவாரம்பொருந்திய சங்கு வாள் முதலிய ஆயுதங்களைத்தரித்த விஷ்ணுமூர்த்தியின் மருகனும்,—குழல் மேகம் தனம் தாது இலகும் கஞ்சம் ஆம் வள்ளி காந்தன் - கூந்தல் மேகம்போலவும் முலைகள் மகரந்தம் விளங்குகின்ற தாமரையரும்புபோலவும் ஆகின்ற வள்ளிநாயகிக்கு நாயகனும்,—அந்தம் நந்தாது விளங்கு இவ்வுலகு அருள் ஏரகக் காங்கெயன் - அழகுகெடாமல் விளங்

காநின்ற இவ்வுலகத்தைச் சிருஷ்டித்தருளிய திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற கங்காபுத்திரனுமாகிய,—நம் கந்தன் அந்தாதி படித்தார்க்கு - நமது கந்தசுவாமியின்மேற் செய்யப் பட்ட திருவந்தாதியைப் படித்தோர்களுக்கு,—சங்கட வினை இல்லை - வருத்தத்தைத்தரத்தக்க இருவினைகளும் உண்டா காவாம். எ - று. (அரு)

முதலடியிலுள்ள அம் சாரியை.

கடக்கா ரியானை யளறுற் றெனநிதிக் காதல்வினை [ல்சங்
கடக்கா ரியாவும் பொய்யாக்கண் டிம்மக்கள் கருத்தென்கொ
கடக்கா ரியாமனை யாதிய துன்பங் களைந்துய்ந்திடார்
கடக்கா ரியாக முழங்கே ரகாவுயர் காசினிக்கே.

(இ - ள்.) தக்கார் யாகம் முழங்கு ஏரகா - மேலோர்களா கிய பிராமணர்கள் செய்கின்ற யாகவொலி முழங்குகின்ற திரு வேரகமலையிலெழுந்தருளியிருக்கின்ற சுவாமிநாதக்கடவுளே!— உயர் காசினிக்கு - உயர்வாகிய பூமியினிடத்தில்,—கடக் கார் யானை அளறு உற்று என நிதிக் காதல் வினை கடக்கார் - மதம் பொருந்திய கரிய யானையானது சேற்று நிலத்தை யடைந்தாற் போலச் செல்வத்தில் வைக்கப்பட்ட ஆசையாகிய வினையைக் கடக்காதவர்களாகிய,—இம்மக்கள் - இம்மனிதர்கள்,—யாவும் பொய்யாக் கண்டு - (உலகத்தின்கணுள்ள) சகலவஸ்துக்களும் அழியுந்தன்மையுடையன வென்பதை யறிந்திருந்தும்,—சங்க டக் காரியாம் மனை ஆதிய துன்பங்களைந்து உய்ந்திடார் - வருத் தத்தைத் தரத்தக்கவளாகிய மனையாள் முதலிய துன்பங் களை நீக்கிப் பிழைக்கமாட்டார்கள்;—கருத்து என் கொல் - இவர்கள் எண்ணம் யாதோ?—(அறியேன்.) எ - று. (அசு)

காசிக்கு மதிக்க வேதேடு வீர்நெஞ் சகநெருங்கக்
காசிக்கு மதிமுக மொழி யார்துயர் காட்டுமுன்னே
காசிக்கு மதிக மகிமை யேரக கந்தவந்து
காசிக்கு மதியை யென்கீர் துணைகொனுங் கைத்தனமே.

(இ - ள்.) இக் கு மதிக்கக் காசு தேடுவீர் - இப்பூமியிலுள் ளவர்கள் மதிக்கும்படி திரவியத்தைத் தேடுகின்றவர்களே!—அக் காசு நெருங்கு நெஞ்சகம் - அந்த இரத்தினுபரணங்கள் விளங்குகின்ற மார்பையும்,—மதி முகம் - சந்திரன்போன்ற முகத்தையும்,—இக்கு மொழியார் - கருப்பஞ்சாறுபோன்ற மதுரித்த சொல்லையுமுடைய பெண்களாலுண்டாகும்,——துயர் காட்டு முன்னே - துன்பத்தைக் காண்பித்தற்கு முன்னே,—காசிக்கும் அதிக மகிமை ஏரக - காசிக்ஷேத்திரத்தைப்பார்க்கினும் மிக்க மகிமைபொருந்திய திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்றவனே!—கந்த - கந்தசுவாமியே!—வந்து கா என்கீர் - வந்து காத்தருளும் என்று பிரார்த்திக்கமாட்டீர்கள்,—உம்சிக்கு மதி கைத்தனம் துணைகொல் - உங்களுடைய குற்றம் பொருந்திய அறிவும் கையிலுள்ள செல்வமும் துணையாகுமோ?

ஏகாரம் தேற்றம். ஐ-சாரியை.

தனத்திருக் கும்பொழு தாவிபின் னேநுந் தமருமண்ணுந்
தனத்திருக் கும்ப மடவாரு மெய்துவ ரோசயிலா
தனத்திருக் கும்பர னோரக மேத்துஞ் சலந்தருவி
தனத்திருக் கும்பவ முந்தீரு மெய்யிது சத்தியமே.

(இ - ள்.) தனத்து இருக்கும் பொழுது - செல்வத்தோடிருக்குங் காலத்தில்,—ஆவி பின்னே - உயிர்போங்காலத்து அதன்பின்னே,—நும் தமரும் மண்ணும் இரு கும்ப தனத்து மடவாரும் எய்துவரோ - உங்களுடைய சுற்றத்தார்களும் மண்

ணும் இரண்டாகிய குடம்போன்ற தனங்களையுடைய மனைவி யர்களும் கூடவருவார்களோ?—(வரமாட்டார்களாதலின்,)—சயில ஆதனத்து இருக்கும் பரன் ஏரகம் எத்தும் - மலைகளை இருப்பி டமாகக்கொண்டெழுந்தருளியிருக்கின்ற சுவாமிநாதக்கடவுளு டைய திருவேரகமலையைத் துதியுங்கள்,—சலம் விதனம் தரும் திருக்கும் பவமும் தீரும் - துன்பமும் விசனமுந் தருகின்ற வஞ்சகமும் பிறவியு நீங்கும்;—இது மெய் சத்தியம் - இது உண்மை யென்பது சத்தியம். எ - று. (அஅ)

சத்திக் கராவை யகம்போற்று மேரக தந்திபற்றுஞ்
சத்திக் கராவை யடர்த்தோன் மருக சமர்செயவா
சத்திக் கராவை மலரம்பு கொண்டுவந் தார்மதியஞ்
சத்திக் கராவை யிடையாட்கு வேறின்று தாவரமே.

(இ - ள்.) சத்திக் கரா - வேலாயுதத்தைத்தரித்த திருக்க ரத்தையுடையவனே!—வையகம் போற்றும் ஏரக - பூவுலகத் தாரால் துதிக்கப்படுகின்ற திருவேரகமலையில் எழுந்தருளி யிருப்பவனே!—தந்தி பற்றும் சத்திக்கராவை அடர்த்தோன் மருக - கஜேந்திரன் என்னும் யானையைப் பிடித்த வல்லமை பொருந்திய கராசுரன் என்னும் முதலையைக்கொன்ற விஷ்ணு மூர்த்தியின் மருகனே!—சமர்செய வாசத்து இக்கு ஆர் ஐ மலர் அம்பு கொண்டு வந்தார் - யுத்தஞ்செய்ய வாசனையையு டைய கருப்புவில்லினிடத்தேபொருந்திய ஐந்து புஷ்பபாணங் களைக்கொண்டு மன்மதனார் வந்திருக்கின்றார்,—அரா ஐ இடை யாட்கு - பாம்பின்படத்தை ஒத்த அழகிய நிதம்பத்தையுடைய இப்பெண்ணுக்கு,—மதி அஞ்ச - அறிவானது கலங்க,—திக்கு வேறு இன்று - யாதொரு ஆதாரவும் இல்லை,—வரம் தா - வரத் தைக்கொடுத்தருள். எ - று. (அகூ)

இடையென்பது நிதம்பத்துக்கானது ஆகுபெயர்.

தாதா ரகல வுடலம்பொய் யென்றுண்மை தான்பெறவே
தாதா ரகல வடிவேல வாசெழுந் தாமரைப்பா
தாதா ரகப்பொரு ளேயரு ளேநின் சரணங்கரு
தாதா ரகம்புகு தாவே ரகாநற் சிவாசலனே.

(இ - ள்.) தார் அகல - மலர்மாலையைத் தரித்த மார்பை யுடையவனே!—வடி வேலவா - கூர்மைபொருந்திய வேலாயு தத்தை யுடையவனே!—செழும் தாமரைப் பாதா - செந்தாம ரைமலர்போன்ற திருவடிகளையுடையவனே!—தாரகப் பொரு ளே - பிரணவப் பொருளாயுள்ளவனே!—அருளே - கிருபா மூர்த்தியே!—நின் சரணம் கருதாதார் அகம் புகுதா ஏரகா - தேவரீரது திருவடிகளை நினையாதவர்களுடைய மனதினிடத் துச் செல்லாது திருவேரகமலையிலெழுந்தருளி யிருக்கின்றவ னே!—நல் சிவா சலனே-நல்ல சிவசைலத்தில் வசிப்பவனே!— தாது ஆர் அகல உடலம் - சப்த தாதுக்களோடு பொருந்திய பெரிய சரீரம்,—பொய் என்று உண்மை பெற தா - நிலையில் லாததென்று அறியும் உண்மையறிவை யடையும்படி கிருபை செய்தருளும். எ - று. (கூ0)

தான் சாரியை. ஏ-அசை.

சலங்கண் டகனெனுங் காலன்கொண் டெய்துஞ் சமயத்திற்
சலங்கண் டகங்குழைந் தேசுற்றத் தார்க டனித்தனியே[சஞ்
சலங்கண் டகநின் றிரங்குந் துயரொழிப் பார்கள்சலஞ்
சலங்கண் டகவர விந்தமல் கேரகஞ் சார்குவரே.

(இ - ள்.) சலஞ்சலம் கள் தகு அ அரவிந்தம் மல்கு ஏர கம் சார்குவர் - சங்குகளும், தேன்பொருந்திய அந்த தாமரைம லர்களும் நிறைந்திருக்கின்ற திருவேரகமலையை யடைபவர் கள்;—சலம் கண்டகன் எனும் காலன் கொண்டு எய்தும் சமய

த்தில் - துன்பத்தைத்தருகின்ற துஷ்டனாகிய இயமன் (உயிரைக்) கவர்ந்துகொண்டு செல்லுங்காலத்தில்,—சுற்றத்தார்கள் - (மனைவி மக்கள் முதலிய) சுற்றத் தார்கள்,—சஞ்சலம் கண்டு - (இயமனாலுண்டாகும்) துன்பத்தைக்கண்டு,—அகம் குழைந்து - மனம் நைந்து,—தனித் தனியே சலம் கண்களில் நிறைய நின்று இரங்கும் துயர் ஒழிப்பார்கள் - தனித்தனியே ஜலம் கண்களில் நிறைய நின்று ஒழுகுகின்ற துயரத்தை நீக்கிக் கொள்வார்கள். எ - று. (௬௧)

இரண்டாமடியிலுள்ள ஏகாரம் அசை.

குவலைய வாவி திகழே ரகாமணிக் கோவையின்வா
குவலைய வாவி யுழலுமென் னெஞ்சன்பு கொள்வதென்றோ
குவலைய வாவி தனந்தீர்க் குமான்மரு காகுற்றமோங்
குவலைய வாவி ரவும்பிறப் பாங்கங் குலகலவே.

(இ - ள்.) குவலைய வாவி திகழ் ஏரகா - நீலோற்பலங்களையுடைய தடாகங்கள் விளங்காநின்ற திருவேரகமலையில் எழுந்தருளியிருக்கின்றவனே!—மணிக் கோவை வாகு வலய - இரத்தினமாலைகள் விளங்குகின்ற வாகுவலயத்தையுடையவனே!—குவலைய ஆ விதனம் தீர்க்கும் மால் மருகா - பூமியினிடத்துள்ள பசுக்களினது விசனத்தைத் தீர்த்தருளிய விஷ்ணுமூர்த்தியின் மருகனே!—குற்றம் ஓங்கு வலை அவா விரவும் பிறப்பு ஆம் கங்குல் அகல - குற்றங்கள் மிகுந்த வலைபோன்ற ஆசையினாலுண்டாகின்ற பிறவியாகிய இருள் நீங்க,—வாவி உழலும் என் நெஞ்சு அன்பது கொள்வது என்றோ - (அங்கு மிங்குந்) தாவி அலைகின்ற அடியேன் மனம் (தேவரீரிடத்து) அன்பு வைப்பது எந்நாளோ? எ - று. (௬௨)

முதலடியிலுள்ள இன் சாரியை.

கலங்கா மனம்பு முலைவிழி யாமங் கையர்மயலைக்
கலங்கா மனம்புயன் போற்றிடு மேரகன் கால்கடொழு
கலங்கா மனம்புன் னெறியடை யாம லெனக்கருதோங்
கலங்கா மனம்புகி லேமென் றியாங்கதி கண்டிடலே.

(இ - ள்.) மனம் - மனமானது,—புல் நெறி அடையாமல் - கீழ்மார்க்கத்தை அடையாமல்,—அம் கா மன் அம்புயன் போற்றிடும் ஏரகன் கால்கள் தொழுகலம் - அழகிய கற்பகச் சோலைக் கரசனாகிய இந்திரனும், தாமரையாசனனாகிய பிரம தேவனுந் துதிக்கின்ற திருவேரகமலையி லெழுந்தருளியிருக்கின்ற சுவாமிநாதக் கடவுளினது திருவடிகளை வணங்கினோமில்லை;—கல் காமன் அம்பு முலை விழியாம் மங்கையர் மயலைக் கல் எனக் கருதோம் - மலையையும் மன்மதனுடைய பாணமாகிய நீலோற்பலமலரையும் போன்ற முலைகளையுங் கண்களையுமுடைய பெண்களின்மேல் வைக்கப்பட்ட மயக்கத்தைக் களைந்துவிடு என்று நினைக்கமாட்டோம்;-கலங்காமல் நம்புகிலேம்- கலக்கமடையாமல் (நாம்) நம்பினோமில்லை.—யாம் கதி கண்டிடல் என்று - (இங்ஙனமாயின்,) நாம் மோக்ஷத்தை அடைதல் எந்நாள்? எ - று. (கூரு)

முதலடியிலுள்ள அம் சாரியை.

கண்ட கரத்த மலர்நோக் கசுரக் கயவரெனுங்
கண்ட கரத்த பனன்முன் னிருளெனக் காசினியின்
கண்ட கரத்திரு வேர காமுரு காகடம்பார்
கண்ட கரத்தயில் வைத்தோ யருள்வினைக் கட்டறவே.

(இ - ள்.) கண் தகு அரத்த மலர் நோக்கு அசுரக் கயவர் எனுங் கண்டகர் - கண்கள் தகுதிபொருந்திய செவ்வரத்தமலர் போலச் சிவந்து பார்க்கின்ற அசுரர்களாகிய கீழ்மக்கள் என்று

சொல்லப்பட்ட பாதகர்களை,—அத் தபனன் முன் இருள் எனக் காசினியின் கண் தகர் திரு ஏரகா-அச்சூரியன்முன்னே கண்ட இருள்போலப் பூமியின்கண்ணே அழித்தருளிய திரு வேரக நாதனே!—முருகா - இளமைப்பருவத்தை யுடையவ னே!—கடம்பு ஆர் கண்ட - கடப்பமாலைபொருந்திய திருக் கண்டத்தையுடையவனே!—கரத்து அயில் வைத்தோய் - திரு க்கரத்தில் வேலாயுதத்தை வைத்தருள்கின்றவனே!—வினைக் கட்டு அற அருள் - அடியேனைப் பந்தித்திருக்கின்ற இருவினை க்கட்டு நீங்க கிருபை செய்தருளுக. எ - று. (கூச)

மூன்றுமடியிலுள்ள அகரம் சாரியை.

கட்டா மரைநொடிப் போதுநில் லாதுசெல் காதலையிக்
கட்டா மரைப்படுங் காலன்கை யிப்பெருங் காயம்பற்றிக்
கட்டா மரையென வாழ்நாளை வீணிற் கழித்துக்கல்லோங்
கட்டா மரைநல்ல வயலே ரகன்புகழ்க் கல்வியையே.

(இ - ள்.) கைப்பற்றிக் கட்டு ஆ மரை என - கையினாற் பிடித்துக் கட்டுகின்ற பசுவையும் மானையும்போல,—கட்டு அரை நொடிப்போதும் நில்லாது செல் காது அலை - தடைப் பட்டு அரைநொடிப்போதும் நில்லாமலும் போகாமலும் அலை கின்றதும்,—காலன் இக்கட்டு அரைப்படும் இப் பெருங்காயம்- இயமனால் துன்பத்திற்கிடந்து அரைபடுகின்றதுமாகிய, இப் பெரியசரீரத்தினது,—வாழ்நாளை வீணில் கழித்து - வாழ்நாளை வீணாளாகக் கழித்து,—கள் தாமரை நல்ல வயல் ஏரகன் - தேன்பொருந்திய தாமரைமலர்களையுடைய நல்ல வயல்களாற் சூழப்பட்ட திருவேரகமலையில் எழுந்தருளியிருக்கின்ற சுவாமி நாதக்கடவுளினது,—புகழ் கல்வியைக் கல்லோம் - கீர்த்தியைச் சொல்லுகின்ற கல்வியைக் கற்றோமில்லை, எ - று. (கூரு)

ஆம் இரண்டும் சாரியை.

கல்லார வாவி திகழே ரகன்மணிக் காறொழுது
கல்லார வாவினை வீடெய்த வேகதி காட்டுமெய்ந்நூல்
கல்லார வாவி நிலையல வென்று கருதினெஞ்சாங்
கல்லார வாவி மலாவென் றுரைத்திலர் கண்கசிந்தே.

(இ - ள்.) கல் ஆர் அவா வினை வீடு எய்த கதி காட்டும் மெய்ந்நூல் கல்லார் - மலைபோலப் பொருந்திய ஆசைகளும் வினைகளும் அழிவு அடைய மோக்ஷத்தைக் கொடுக்கின்ற மெய்ந்நூலைக் கல்லாதவர்கள்,—ஆவி நிலை அல என்று கருதி - உயிரானது நிலையுடையன அல்ல என்று நினைத்து,—கல்லார வாவி திகழ் ஏரகன் மணிக்கால் தொழுது - நீலோற்பலமலர்களையுடைய தடாகங்கள் விளங்குகின்ற திருவேரகமலையிலெழுந்தருளியிருக்கின்ற சுவாமிநாதக்கடவுளுடைய அழகிய திருவடிகளை வணங்கி,—விமலா நெஞ்சு ஆம் கல் ஆர வா என்று கண் கசிந்து உரைத்திலர் - மலமுத்தரே மனமாகிய கல்லினிடத்தே பொருந்த வந்தருளுக என்று கண்கள்கசிந்து(ஆனந்தபாஷ்பஞ் சொரிய) பிரார்த்தித்திலர். எ - று. (௬௬)

இரண்டாமடியிலுள்ள ஏகாரம் தேற்றம், மூன்றுமடியிலுள்ள அகரம் சாரியை.

சிந்து வணக்கணன் சேய்கணை பாயத் தியங்கிக்கண்ணீர்
சிந்து வணக்க னுதல்விழி போற்றுயர் செய்யமதி
சிந்து வணக்கவி பாடாளென் றேகண்டு சென்றுளங்க
சிந்து வணக்கத் துடனே ரகற்குரை செய்மின்களே.

(இ - ள்.) சிந்து வணக் கணன் சேய் கணை பாயத் தியங்கிக் கண்ணீர் சிந்துவள் - (உனது தலைவியானவள்) கடல்போன்ற நிறத்தையுடைய விஷ்ணுமூர்த்தியின் புத்திரனாகிய மன்ம

தனுடைய பாணங்கள் தைக்க மயங்கிக் கண்ணீர்விடுகின்ற னள்;—மதி நக்கன் நுதல் விழி போல் துயர் செய்ய - சந்திர னணிந்தவன் சிவபெருமானது நெற்றிக் கண்போல் துன்பத்தைச் செய்ய,—சிந்து வணக் கவி உளம் கசிந்து பாடாள் என்று - நொண்டிச்சிந்தையும் வண்ணப்பாட்டையும் மனங்கசிந்து பாட மாட்டாள் என்று,—ஏரகற்குச் சென்று கண்டு வணக்கத்து டன் உரைசெயுமின்கள் - (தோழிகளே) திருவேரகமலைகளு ள்ள எனது தலைவனைப்போய்ப் பார்த்து (என்விஷயத்தை) வணக்கத்தோடு சொல்லுங்கள். எ - று. [தலைவி தோழிக்குக் கூறல்.] (கூஎ)

வண்ணம் கண்ணன் என்பன வணம் கணன் என வந்தவை இடைக்குறை. மூன்றுமடியிலுள்ள ஏகாரம் தேற்றம்.

களங்கண் டனமலை வேல்வளை யாங்குழல் கார்வசனங்
களங்கண் டனமட வார்மால் படிந்து கலந்தவருட்
களங்கண் டனமினி நெஞ்சேசும் மாவொழி யாக்கருவாங்
களங்கண் டனந்திரு வேரகஞ் சேர்ந்துய்வை கைதொழுதே.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!—களம் வளை கண் வேல் தனம் மலை குழல் கார் வசனங்கள் அம் கண்டு அன - கழுத்துச் சங்கும், கண்கள் வேலும், முலைகள் மலையும், கூந்தல் மேகமும், சொற்கள் அழகிய கற்கண்டும் போன்ற,—மடவார் மால் படிந்து - பெண்களது ஆசையிலழுந்தி,—கலந்து அவர் உள் களம் கண்டனம் - (அப்பெண்களோடு) சேர்ந்து அவர்கள் மனவஞ்ச கத்தை யறிந்தோம்;—இனிச் சும்மா ஒழியாக் கருவாம் களம் கண்டனம் - இனி வீணுகக்கழிகின்ற பிறப்பாகிய இடத்தைக்

கண்டோம்.(ஆதலின்),--திருவேரகம் சேர்ந்து கைதொழுது உய்வை - திருவேரகமலையையடைந்து கைகுவித்து வணங்கி உய்வாயாக. எ - று. (௬௮)

கள்ளம் என்பது களம் என வந்தது இடைக்குறை.

கைத்த வருக்க முனையம்பு சாயக் களத்திடைப்ப
கைத்த வருக்க வசுரருஞ் சூருங் கலங்குறத்து
கைத்த வருக்க னிகர்வேல வேரக காதறனைக்
கைத்த வருக்கன்ப னுவதென் றாறிரு கட்பரனே.

(இ - ள்.) கை தவர் உக்க முனை அம்பு சாயக் களத்திடைப் பகைத்த - கையினிடத்துள்ள வில்லழியவும், கூர்மை பொருந்திய அம்பு முறியவும் யுத்தகளத்திடைப் பகைத்த,—வருக்க அசுரரும் சூரும் கலங்குறத் துகைத்த அருக்கன் நிகர் வேல - கூட்டமாகிய அசுரர்களுஞ் சூரபத்மனும் கலங்கும்படி வருத்திய சூரியனையொத்த வேலாயுதத்தையுடையவனே!—ஏரக - திருவேரகமலையிலெழுந்தருளி யிருக்கின்றவனே!—ஆறிரு கண் பரனே - பன்னிரண்டு திருக்கண்களையுடைய மேலானவனே!—காதல் தனைக் கைத்தவருக்கு - ஆசையை யொழித்தவருக்கு,—அன்பன் ஆவது என்று - அன்புடையவனுய்க் கிருபை செய்வது எந்நாள்? எ - று. (௬௯)

பரங்கிரி யார்திரு வேரக வேலர் பரவுறுமும்
பரங்கிரி யாமற் கொடுஞ்சூரை வென்ற பரமசொரூ
பரங்கிரி யார்மண் ணளந்தான் மருகர்நம் பால்வந்திருப்
பரங்கிரி யாமுதற் சித்தியு மீவர்பைம் பூதலத்தே.

(இ - ள்.) பரங்கிரியார் - திருப்பரங்குன்றத்தி லெழுந்தருளியிருக்கின்றவரும்,—திருவேரக வேலர் - திருவேரகமலையி

லெழுந்தருளியிருக்கின்ற வேலாயுதத்தை யுடையவரும்,— பரவு உறும் உம்பர் இரியாமல் அங்கு கொடும் சூரை வென்ற பரம சொரூபர் - துதிக்கின்ற தேவர்கள் தோற்றோடாமல் அப்பொழுதே கொடுமை பொருந்திய சூரபத்மனைச் செயித்த மேலான திருவுருவத்தையுடையவரும்,—அம் கிரியார் - அழகிய மலைகடோறும் வசிக்கின்றவரும்,—மண் அளந்தான் மருகர் - உலகங்களையளந்த விஷ்ணுமூர்த்தியின் மருகருமாகிய சுவாமிநாதக்கடவுள்,—நம் பால் வந்து இருப்பர் - நம்மிடத்தே வந்து எழுந்தருளியிருப்பர்;—பைம் பூதலத்தே அம் கிரியாம் முதல் சித்தியும் ஈவர் - பசிய பூமியினிடத்தே அணிமா கரிமா முதலிய சித்திகளையுங் கொடுத்தருளுவர். எ - று. (௧௦௦)

திருவேரகத்தந்தாதியுரை

முற்றுப்பெற்றது.

---

## மங்கலவாழ்த்து.

பார்வாழி யேரக வேலவன் வாழி பகர்கடப்பந்
தார்வாழி சேவற் கொடிவாழி வேண்மயின் வாழிதக்கோர்
சீர்வாழி யந்தணர் வேதங்கள் வாழி செழுங்குடியி
னோர்வாழி சைவ நெறியோர்கள் வாழி யிசைபெறவே.

(இ - ள்.) பார் வாழி - உலகங்கள் வாழக்கடவன,—ஏரக வேலவன் வாழி - திருவேரகமலையிலெழுந்தருளி யிருக்கின்ற வேலாயுதக்கடவுள் வாழக்கடவர்,—பகர் கடப்பம் தார் வாழி - சொல்லப்பட்ட அக்கடவுள் அணிந்திருக்கின்ற கடப்பம்பூமாலை வாழக்கடவது,—சேவல் கொடி வாழி - அவருடைய

கோழிக் கொடி வாழக்கடவது,—வேல் வாழி - அவருடைய ஆயுதமாகிய வேல் வாழக்கடவது,—மயில் வாழி - அவர் வாகனமாகிய மயில் வாழக்கடவது;—தக்கோர் சீர் வாழி - தகுதி பொருந்திய பெரியோர்களது கீர்த்திகள் வாழக்கடவன,—அந்தணர் வாழி - பிராமணர்கள் வாழக்கடவர்கள்,—வேதங்கள் வாழி - வேதங்கள் வாழக்கடவன,—செழும் குடியின் ஏர் வாழி - செழுமைபொருந்திய வேளாண்குடியினர்களது பயிர்த்தொழில் வாழக்கடவது;—சைவநெறியோர்கள் இசை பெற வாழி - சிவமார்க்கத்தை யநுஷ்டிக்கின்ற சைவர்கள் புகழுண்டாக வாழக்கடவர்கள். எ - று.

ஏர் என்றது ஏரினாலுண்டாகும் பயிர்த்தொழிலுக்கானது ஆகுபெயர்.